


வதிரி.சி.ரவீந்திரன்

# மீண்டு வந்த நாட்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டு வந்த நாட்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டு வந்த நாட்கள்

வதிரி. சி. ரவீந்திரன்

**எஸ். கொடகே சகோதரர்கள்**
அரச விருது பெற்ற வெளியீட்டாளர்கள்
675, பி.டி.எஸ். குலரத்ன மாவத்தை
கொழும்பு-10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டு வந்த நாட்கள் | Meendu Vantha Naatkal
கவிதைகள் | Poems
வதிரி.சி.ரவீந்திரன் | Vathiri.S.Raveendran
முதற் பதிப்பு- 2011 First Print
பக்கங்கள்- VIII- 80 Pages

அட்டை அமைப்பு: மேமன்கவி
Cover Designed By: Memonkavi

வெளியீடு:
எஸ். கொடகே சகோதரர்கள்
675, பீ.டீ.எஸ் குலரத்ன மாவத்த
கொழும்பு- 10.

Published By:
S. Godage & Brothers
675, P.D.S. Kularatna Mw,
Colombo- 10.

அச்சுப் பதிவு:
சத்துர அச்சகம்
69, குமாரதாஸ பிளேஸ்
வெல்லம்பிட்டி

Printed By:
Chathura Printers
69, Kumaradasa Place,
Wellempitiya.

ISBN: 978-955-30-3066-5

13945/1987/500

# சமர்ப்பணம்

ஆண்டு பதின்நான்கு
அயராது தவமிருந்து
என்னை
பத்துமாதங்கள்
தன்வயிற்றில் சுமந்து
பின்பு பெரும் வலிகளோடு
எனை வளர்த்து ஆளாக்கி
நான் கொடுக்கும் போதெல்லாம்
"உனக்குப் போதுமா"வென
எனைக் கேட்பாள்
என் அம்மா!
உலகவாழ்வைப் பிரிந்து
செல்லும் போதும்
எனக்காக ஏங்கிய
என் அம்மா;
சின்னத்தம்பி றோசம்மா எனும்
என் அன்பு அம்மாவுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

## தெணியான்

ஐம்பது அறுபது என்பது ஈழத்து இலக்கிய வரலாற்றில் மிக முக்கியமான எழுச்சி மிக்க ஒரு காலகட்டம். அக்கால கட்டத்தைத் தொடர்ந்து பின்னர் எழுபதுகளிலும் அதன் தொடர்ச்சியான இலக்கிய ஓட்டமொன்று பெருகிக் கொண்டு வந்திருக்கின்றது. சாதாரண பொதுமகனும் விளங்கிக் கொள்ளத் தகுந்த எளிமையும் ஆழமும் கலையழகும் மிகுந்த ஆக்க இலக்கியங்கள் அக்காலத்தில் தோன்றின. காலங் காலமாகப் பேசப் பெறாத அப் பொதுமகனே இலக்கியங்களின் பாடுபொருள் ஆனான். அவனது வாழ்வு அவனது பிரச்சினைகள் எடுத்துப் பேசப்பட்டன. அக்கால கட்டத்தில் தாய் மொழிக் கல்வி காரணமாகவும், வேறு சில நியாயங்களினாலும், எக்காலத்திலும் இல்லாத அளவு பெருந்தொகையினரான இளைய தலைமுறையினர் இலக்கியம் படைக்க ஆரம்பித்தனர். இவர்களில் பலர் தமக்குரிய ஆக்க இலக்கியத் துறையாக, புதுக் கவிதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். இலக்கணக் கட்டுக் கோப்புக்குள்ளே இறுகிக் கிடந்த செய்யுள்களின் தளைகள் பாரதியின் வருகையுடன் நீக்கியதன் பேறான தளர்ச்சி நிலையே, புதியவர்களின் கவனம் புதுக் கவிதையின் பால் திரும்புவதற்கு வாய்ப்பாக அமைந்தது.

இந்தக் காலகட்டத்தில் புதுக்கவிதைகள் எழுதுவதற்கு ஆரம்பித்தவர்களுள் ஒருவர் வதிரி.சி.ரவீந்திரன் சி.ரவீந்திரன். அவரது முதற் கவிதை நான் அறிந்தவரை 1972 இல் 'மல்லிகை'யில் வெளிவந்திருக்கின்றது. இன்று பின்னோக்கிப் பார்க்கும் பொழுது, முப்பத்தெட்டு ஆண்டு கால இலக்கிய வரலாற்றுக்கு உரிய ஒருவராக அவர் இனங் காணப்படுகின்றார். ஒரு படைப்பாளியின் இலக்கிய வரலாற்றில் மிக நீண்ட ஒரு காலப் பகுதியாகத் தோன்றும் இக்காலப பகுதியில் ஏராளமான கவிதைகளை ரவீந்திரன் எழுதிக் குவித்திருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஆனால் தொகையில் மிகவும் குறைவான கவிதைகளையே எழுதி வந்திருக்கின்றார் என்பது உண்மை. ஓயாமல் எழுதிக் கொண்டிருக்க வேண்டுமென்னும் எண்ணம் அவரிடத்தில் இல்லாதிருப்பதும், அவர் வகித்த அரச பதவியுமே, அதற்கான காரணங்களாக இருந்திருக்க வேண்டும். எழுபதுகளில் எழுத ஆரம்பித்த போதும், அக்காலம் முதல் தொண்ணூறு வரையுள்ள காலப் பகுதியில் மிக அருந்தலாகவே தமது இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வந்திருக்கின்றார். குறிப்பாக எண்பது முதல் தொண்ணூறு வரையுள்ள பத்தாண்டு காலம் ரவீந்திரன் பேனா மௌனித்துக் கிடந்திருக்கின்றது. ரவீந்திரன் பேனாவின் மௌனம் மிக நியாயமானது என்பதனை ரவீந்திரனை, அவர் வகித்த அரச பதவியை அறிந்தவர்கள் அறிவார்கள்.

வதிரி. சி. ரவீந்திரனிடத்தில் இயல்பாகவே ஒரு கவிதை உள்ளம் இருக்கின்றது. அவருடன் அமர்ந்து நேரில் பேசிக் கொண்டிருக்கும் சமயங்களிலும் இதன் வெளிப்பாட்டை அவதானித்து அறிந்து கொள்ளலாம். பிறர் ஈன நிலை கண்டு துள்ளுவதும், பொய்மையையும் போலித்தனத்தையும் கண்டு எள்ளுவதும், சமூகக் கொடுமை கண்டு சாடுவதும், ஏழ்மை கண்டு இரங்குவதும், கடந்து போன வசந்தத்தை எண்ணி ஏங்குவதும் அவர் இதயத்தின் இயல்புகளாக இருந்து வருவதனை அவரது கவிதைகள் உணர்த்துகின்றன. அவரது கவிதைகளின் தனிச் சிறப்பு, சாதாரண பொது மக்களும் விளங்கிக் கொள்ளத் தகுந்த தான எளிமையும், சற்று நுனிந்து நோக்க வல்லவர்களுக்கு மேலும் ஆழமான பொருளைத் தரவல்லவைகளாக இருப்பதுமே எனலாம்.

ரவீந்திரனின் 'மீண்டு வந்த நாட்கள்' என்னும் இக்கவிதைத் தொகுதி மூன்று பகுதிகளை உள்ளடக்கியதாகத் தொகுக்கப் பெற்றிருக்கின்றது. பொதுவான புதுக் கவிதைகள், கவிதைத் துளிகள், மெல்லிசைப் பாடல்கள் என மூன்றாகப் பகுதியாக்கப்பட்டுள்ள, இக் கவிதைத் தொகுதியைப் படிப்பதற்குத் திறந்தால், ரவீந்திரன் எழுதிய முதற் கவிதையே இத்தொகுதியின் முதற் கவிதையாக இடம் பெற்றிருப்பதனைக் கண்டு கொள்ளலாம். 'அந்த ரயில் போகிறது'(1972) என்னும் இந்தக் கவிதை ஸ்ரீமா, சாஸ்திரி ஒப்பந்தத்தினால் நாடு கடத்தப் பெற்ற மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் துயரம் பற்றி வேதனையுடன் பேசுகின்றது. நாடற்றவர்களாக்கப் பெற்று, கண்ணீர் விட்டுக் கதறி அழுத வண்ணம் இதயச் சுமையுடன் ரயில் ஏறும் தோட்டத் தொழிலாளர்களைச் சுமந்து கொண்டு கோட்டை புகையிர நிலையத்தில் இருந்து புறப்படுகிறது. இந்த 'ஒப்பாரிக் கோச்சி'. அந்த ரயில் இவ்வாறு புறப்பட்டுப் போகிறது:

*"காதலனைப் பிரிந்து செல்லும்*
*காதலின் உயிர்த் துடிப்பு*
*தலைமகனைப் புதைத்த மண்ணை*
*தடவி முகர்ந்து விட்டு*
*மதலை மொழிக் குழந்தையழ*
*மார்பணைத்துப் பால் கொடுக்கும்*
*அபலைப் பெண் அழுதழுது*
*ஏறுகிறாள் ரயில் தனிலே!*
*உள்ளும் நிறைந்த இருள்*
*எதிர்கால உலகு மிருள்*
*கள்ளமில்லா துழைத்தவர்கள்*
*கலங்கி மனம் புழுங்க*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அந்த ரயில் போகிறது*
*மனப் புகையைக் கக்கிறது"*

மலையக மக்களைத் தொடர்ந்து கொழும்பு வாழ் சேரிப்புற மக்களின் வாழ்க்கைப் பாதையில் தினம் தினம் அவர்கள் சந்திக்கும் துன்பங்கள், நெருக்கடிகளை 'பாதை' என்னும் கவிதை எமது மனக்கண்ணில் விரிக்கின்றது. அந்த மக்களின் அவலமான வாழ்வு கண்டு கவிஞரின் உள்ளம் இரங்கி ஏங்குவதைக் காணலாம்.

"*தாழ்வாரத்தில் உலரவிட்ட*
*ஆடைகள்*
*சேரியின் கண்ணீராக*
*வடிக்கும் நீர்த்துளிகள்*
................................
*வாழ்வின் நெரிசலுக்குள்*
*வறுமையுடன் போராடும்*
*ஏழை எளிய வருக்காக*
*என் இதயம் ஏங்கும்"*

கவிஞர் ரவீந்திரன் வட புலத்தைச் சேர்ந்தவர். அதனால் யாழ்ப்பாண மண்ணின் இயல்புகளை நன்கு அறிந்தவர். போர்க்கால அழிவுகளால் தான் பிறந்த சாவக்கச்சேரி மண்ணைப் பார்த்து, 'சாவு வந்ததோ?' என ஏங்குகின்றவர். இத்துணைச் சோகங்களுக்கு மத்தியிலும் அழியாத யாழ்ப்பாணத்து மண்ணின் 'இயல்பு நிலை' யினை, 'சாதிப் பூசல்கள் வாந்தி பேதியாய் வந்து கொண்டுதான் இருக்கின்றன' எனக் குறிப்பிடுகின்றார்.

யாழ்ப்பாணத்தாரின் இந்த மனப்பாங்கு புலம்பெயர்ந்த நாடுகளிலும், எவ்வாறு திமிருடன் பேச வைக்கின்றது என்பதனையும் கவிஞர் பின்வருமாறு சிறப்பாகச் சொல்லுகின்றார்.

*'எங்கள் நாட்டில்*
*தொழிலுக்கு ஒரு சாதி*
*சாதிக்கொரு தொழில்*
*இழிவு சொல்லி அழைத்திடுவோம்*
*இங்கு*
*எந்தத் தொழில் செய்தாலும்*
*அந்தச் சாதியிலா நாம்பிறந்தோம்?*
*உயர் குலத்துப் பெருமையுடன்*
*உழைத்துப் பொருள் சேர்த்து*
*உயர்ந்த குடிகோத்திரத்து*
*உத்தமராய் நிமிர்ந்து நிற்போம்!'*

இந்தத் தேசத்தில் ஆக்க இலக்கியங்களின் பொது இயல்பு சோகம் சுமந்தவைகளாக அண்மைக் காலத்தில் பெரும்பாலும் இருந்து வந்திருக்கின்றன. இந்த நாட்டில் நிகழ்ந்து கொண்டிருந்த கொடிய யுத்தமே அத்தகைய இலக்கியங்களை படைப்பாளிகளிடம் இருந்து தோற்றுவித்தது. மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்கள், அவலங்களைச் சித்திரிக்கும் ஆக்க இலக்கியங்கள் வாசகர் உள்ளங்களைப் பெரிதும் பாதிக்கின்றன என்ற வகையான நம்பிக்கையும் அவை தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது எனலாம். ஆனால் கவிஞர்கள் இயல்பாகவே மென்மையான இயல்புகளை உடையவர்கள். அன்பு செலுத்துவது, காதல் வசப்படுவது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை எழில் கண்டு இன்புறுவது என்பன போன்றவை அவர்களுக்குரிய இயல்புகள் கவிஞர் ரவீந்திரன் அந்த இயல்புகளுக்கு விதிவிலக்கானவ ரல்லர். இயற்கை எழில் கண்டு அனுபவிக்கும் ரவீந்திரனின் 'முற்றத்து மல்லிகை'யில், சித்தம் கவர் கன்னிப் பெண் ஒருத்தியைக் கண்டு சிலுசிலுத்த உணர்வுகளை இவ்வாறு பாடுகின்றார்.

*"முத்துச் சிதறல்களாய்*
*முதிராத பனிஅமுதாய்*
*முற்றத்து மல்லிகையே*
*மோகனமாய் கூத்திட்டு*
*சித்தம் கவர்ந்தெந்தன்*
*சிலுசிலுத்த உணர்வுகளில்*
*சித்திரைப் பூங்காற்றாய்ச்*
*சிரித்த சிறுமலரே!'*

காதல் என்பது யாரைத்தான் விட்டு வைத்திருக்கிறது? கவிஞர் ரவீந்திரனை விதிவிலக்காக விட்டு வைத்திருக்குமா? பாலியப் பருவத்துக் காதல் எக் காலத்திலும் அழியாது இதய ஆழத்தில் நிரந்தரமாகப் புதைந்து கிடக்கும். விருத்தெரியாத சின்னஞ் சிறு பிள்ளைப் பருவத்தில் தோன்றும் காதல் பெரும்பாலும் நிறைவேறாமலே போய்விடுகின்றது. ஆனால் காலங் கடந்தும் விடுத்தாப்பியத்தில் அந்தக் காதலைத் தோண்டிப் பார்க்கும் பொழுது அந்த அநுபவங்கள் மனத்துக்கு ஒரு சுகமாக இதமாக இன்பமாக இனிக்கின்றன. அந்த இனிமையினை எல்லோருந்தான் மீட்டிப் பார்த்துத் தமக்குள் அநுபவிக்கின்றார்கள். அவைகளை வெளியே எடுத்துப் பேசும் வாய்ப்பு படைப்பாளிகளுக்கு, சிறப்பாகக் கவிஞர்களுக்கு உண்டு. கவிஞர் ரவீந்திரனின் 'மனத்திரைக்குள்.......' மறைத்து பொத்திப் பொத்தி வைத்திருக்கும் கடந்த கால இளம் பருவக் காதலினை மீட்டிப் பார்க்கின்றார். இப்பொழுதும் திரைபோட்டு மூடி வைத்திருப்பதனை, வெளியே சொல்ல முடியாத தவிப்புடன் எடுத்துச் சொல்லுகின்றார்,

*'எங்கள் அன்பை*
*எவருக்கும் புரியப்படுத்தாமல்*
*மனத்திரையுள் மூடி வைத்தோம்*
*திரை இன்னும் மூடித்தான் இருக்கிறது*
*யாருக்கும் தெரிவதில்லை*
*எம் இருவரைத் தவிர'*

இந்தக் கவிதைத் தொகுதியின் இரண்டாவது பகுதியாக அமைந்திருப்பது கவித்துளிகள். இத்தகைய துளிக் கவிதைகள் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பெருமளவு வெளிவந்து கொண்டிருந்த ஒரு காலகட்டம் இருந்து வந்தது. கவியுள்ளம் படைத்தவர்கள் உள்ளத்தில் எழுந்த ஒரு கருத்தினை அல்லது பட்ட ஓர் அநுபவத்தினைப் பட்டென்று குறுகிய வடிவத்தில் சொல்லிவிடுவதே இந்தக் கவித்துளிகள் அல்லது துளிக் கவிதைகள். கவிஞர் ரவீந்திரனுக்கு இது வாகான கவிதை வகை. பேனாவில் மாத்திரமன்றி அவர் பேச்சிலும், இத்தகைய கவிதைத் துளிகள் தெறிப்பதுண்டு. இந்தத் தொகுப்பினில் இடம் பெற்றுள்ள துளிக் கவிதைகள் பிரிவு, பேதம், இனம் என்பனவற்றைப் பாடு பொருள்களாகக் கொண்டுள்ளன. சில கவிதைகள் வாசகர் உள்ளங்களில் பதிந்து நிற்கத் தகுந்தவைகளாகவும் இருக்கின்றன.

தொகுதியின் மூன்றாவது பகுதியாக விளங்குவது மெல்லிசைப் பாடல்கள். இவைகள் ஓசையுடன் பாடுவதற்காக எழுதப்பட்டவைகளாக இருப்பதனால் மரபுச் செய்யுள்கள் போல சந்தச் சிறப்பு வாய்ந்தவைகளாகக் காணப்படுகின்றன. இப்பாடல்கள் இசையுடன் பாடிப்பாடி இரசித்து இன்புறத் தகுந்தவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மீண்டு வந்த நாட்கள்' என்னும் இக் கவிதைத் தொகுதி வதிரி. சி. ரவீந்திரனின் முதற்தொகுதி. ஈழத்துக் கவிதை இலக்கியத்துறையில் ரவீந்திரன் பெயர் பேசப்படுவதற்கும், அவர் விழித்தெழுந்து தொடர்ந்து எழுதுவதற்கும் வழி வகுக்கப் போகும் தொகுதி. ஈழத்து வாசகர்கள் இந்தக் கவிதை நூலினை உவந்தேற்று ஆதரவு நல்க வேண்டும் என்பது எனது அவா.

கவிஞர் ரவீந்திரனுக்கு எனது வாழ்த்துக்கள்!

**கலையருவி**
**கரணவாய் வடக்கு**
**வல்வெட்டித்துறை**
**12.12.2010**

# என்னுரை

## வதிரி.சி. ரவீந்திரன்

**'மீண்டு வந்த நாட்கள்'** என்ற கவிதைத் தொகுப்பை உங்களுக்கு தருவதில் மகிழ்ச்சியடைகின்றேன். தொகுப்பு ஒன்றை வெளியிடுவதில் ஏற்படும் சிரமங்கள், அவலங்கள் பற்றி மூத்த படைப்பாளிகள் பலரின் அனுபவங்களும் என் நெஞ்சை வருடியது. கவிதைகளை எழுதும் போது தொகுப்பு ஒன்றை வெளியீடு செய்வேனா என்று என்னையே நான் கேட்ட நாட்களுமுண்டு. மனித வாழ்வில் ஏற்படும் தடங்கல்களும் சோர்வுகளும் இந்த ஐயத்திற்குக் காரணமாகவும் அமைகிறது. இன்றைய கணினி யுகத்தில் நூல் வெளியீடுகள் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முன்பெல்லாம் மிக அருந்தலாகவே நூல்கள் வெளிவந்தன. இன்றைய நவீன இலக்கிய அரங்கில் படைப்பாளிகளின் வருகையும், ஒரு காரணமாக அமைகிறது. ஒரு குறிப்பிட்ட காலத்துள் கவிதைகளையாத்து ஒரு நூலை வெளியீடு செய்து படைப்பாளிகள் தம்மைத் திடப்படுத்திக் கொள்கின்றனர். இன்றைய படைப்புகளை வாசித்து நிறை குறைகளை சொல்பவன் வாசகன். வாசகனுக்குப் புரியும் படியாக எழுத்துகள் படைக்கப்பட வேண்டும். அந்த வகையிலேயே எனது கவிதைகளை எல்லோரும் புரியும் படியாக வடித்துள்ளேன். எனது கவிதைகள் நேரடியாகவே விடயத்தை கூறுபவை.

எனது எழுத்துத்துறையின் ஆர்வத்திற்கு வாசிப்பே முக்கிய காரணியாகிறது. எனது மாமாமார் இருவரும் வாசிப்புப் பழக்கத்தை எனக்கு வளர்த்து வைத்தனர். பத்திரிகைகள், அம்புலிமாமா, கல்கண்டு போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களைத் தந்து வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினர். நான் கல்வி கற்ற கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் சுற்று வாசிப்பு முறையினை கல்லூரி அதிபர் மூ.சி. சீனித்தம்பி அவர்கள் நடைமுறைப்படுத்தியிருந்தார். அதனூடாகப் பல நூல்களை வாசிக்கும் பயனையும் பெற்றிருந்தேன். இந்த சுற்று வாசிப்பினூடாகப் பயன் பெற்றவர்கள் பலர். இதனூடாகப் பலர் எழுதும் ஆற்றலையும் பெற்றிருந்தனர். எனவே எனக்கும் சுற்று வாசிப்பு பயனைப் பெறவைத்தது என்பதை மறப்பதற்கில்லை. 1967ம் ஆண்டில் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளையின் வருகையானது எமது கல்லூரியில் ஒரு உற்சாகத்தை உண்டு பண்ணி வைத்தது. அவரது கவிதைகளில் ஆர்கசிக்கப்பட்டேன். காரை. செ. சு அவர்கள் தனது கவிதைகளையும், கவியரங்கக் கவிதைகளையும் வகுப்பு மாணவர்களாகிய எமக்கு முதலில் வாசித்துக் காட்டுவார். அவரது 'கவியரங்கம்' நிகழ்வு யாழ்- பகுதிகளில் நடைபெறும் போது சென்று பார்வையாளனாகக் கலந்து கொள்வேன். இப்படியாக இவரது கவிதைகளில் ஒரு பற்று ஏற்பட்டது. எனது சிறுவர் கவிதை ஒன்றை எழுதி அவரிடம் கொடுத்தேன். 1971ம் ஆண்டு ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்தது. அக் கவிதை என்னிடமிருந்து தவறிவிட்டது. எனது ஆரம்ப கால எழுத்துக்கு காரை செ.சு. ஊக்கம் தந்தார் என்பதையும் மறந்து விட முடியாது.

எனது ஆரம்ப கால இலக்கிய நண்பனாக நந்தினி சேவியர் விளங்கினார். அவரோடு தான் இலக்கியம் பேசுவேன். இருவருக்குமிடையில் நெருங்கிய நட்பு உண்டானது. இருவருமே சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். நான் சாவகச்சேரியையும் அவர் சாவகச்சேரி மட்டுவிலையும் சேர்ந்தவரென்பதாலோ அந்த நட்பு இப்போதும் பேணிக் காக்கப்படுகிறது. அவரூடாக 'பூம்பொழில்' சஞ்சிகையில் 1971ல் 'எங்கள் எதிர்காலம்' என்ற கவிதையும் வெளிவந்தது. சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவன்; வதிரி என்று ஊரைக் குறிக்கிறானே என ஒரு கேள்வி எழுகிறது! பாடசாலைக் காலத்திலேயே வதிரி தமிழ் மன்றத்து இலக்கியக் கூட்டங்களில் கவியரங்கு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வந்தேன். இதற்கு திரு சி. க. இராஜேந்திரன் அவர்களும், அண்ணன் அமரர் ராஜ. ஸ்ரீகாந்தனும் களம் அமைத்துத் தந்தனர். இதன் காரணமாகவே வதிரி என்று பெயரையும் பதித்துக் கொண்டேன். எனது தாயாரின் ஊரும் வதிரி என்பதால் அது பொருந்துமென எண்ணி வதிரி என்ற பெயரைப் பதித்துக் கொண்டேன். கொழும்பில் பலருக்கு என்னை வதிரியென்றாலே தெரியுமென்பதையும் மறவாமல் ஞாபகப்படுத்துகிறேன்.

1972ல் இலங்கை வானொலியில் வாலிப வட்டம் நிகழ்ச்சிகளில் நேரடியாக சென்று பங்கேற்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. இதனூடாகவும் பலர் நட்பாகினர். அதனூடாகவும் என்னை வளர்த்துக் கொண்டேன். கொழும்பிலே நான் வாழ்ந்தமையால் எனக்கு இந்த வாய்ப்புகள் கிடைத்தன. இக்காலகட்டத்தில் எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தெணியான்' அவர்களின் அறிமுகம் கிடைக்கிறது. எனது கவிதையைப பார்வையிடுகிறார். ஆலோசனைகள் தருகிறார். உற்சாகமூட்டுகிறார். மல்லிகையில் 'அந்த ரயில் போகிறது' 1972ல் பிரசுரிக்கப்படுகிறது. எனது நேரடி அனுபவம் கவிதையாக மலர்கிறது. மல்லிகை ஜீவாவும் இதே காலத்தில் எனக்கு அறிமுகமாகிறார். மல்லிகைக் கவிதையே என் பெயரைச் சொல்ல வைக்கிறது. இது எப்படி என்பதைப் பின்னர் சொல்வேன்.

எழுத்து என்பது எழுதுவதோடு என்று இருந்தால் சாத்தியப்படாது. பல இலக்கியத் தொடர்புகளை எம்மோடு இணைக்க வேண்டும். ஆற்றல் மிக்கவர்களை அணுக வேண்டும். அவர்களோடு மனதாரப் பழக வேண்டும். நட்பு, அறிமுகம் என்பது கலை இலக்கியவாதிகளோடு சேர வேண்டும். அவரவர் கருத்துகளை அறிந்து வைத்திருக்க வாய்ப்பு இருக்கிறது. ஒவ்வொரு மனிதனுள்ளும் ஒவ்வொரு திறமை இருக்கிறது. "அவரிடம் என்ன உள்ளது" என எண்ணுவது தவறென்றே நான் கருதுகிறேன். படைப்புலகம் விசாலமானது. அதில் பல சந்திப்புகள் நிகழும். ஈழத்து முன்னணிப் பத்திரிகைகளான வீரகேசரி, தினகரன், தினபதி ஆகியவற்றுடன் நட்புரீதியாக தொடர்பு கொண்டு என் எழுத்துக்களைப் பதித்துக் கொண்டேன். 1972ல் நண்பர் லெ. முருகபூபதியின் நட்பு கிடைத்தது. இவரை அறிமுகம் செய்து வைத்தவர், நீர்கொழும்பு வர்த்தகரும் எனது ஊரவருமான இ. சதாசிவம் அவர்களாவார். முருகபூபதியூடாகப் பலரை நட்பாக்க முடிந்தது. அதில் அமரர் பொன். ராஜகோபல் (வீரகேசரி வாரமலர்) எழுதும் எழுதும் என்று எனக்கு உற்சாகம் தந்து கொண்டிருப்பார். அவருக்காகவே கவிதை, கட்டுரைகள் எழுதியிருக்கிறேன். வளரும் படைப்பாளிகளை வளர்த்து விடுவதில் மகா கெட்டிக்காரர்.நான் பத்து வருடங்களாக மௌனம் சாதித்து விட்டேன். எனது அரச தொழில் காரணமாகவும், மத்தியகிழக்கில் வேலை புரிந்தமையும் என்னை மௌனம் காக்க வைத்தது. இப்போதும் எனது எழுத்துக்கு கட்டுப்பாடுதான். சுதந்திரமாக பேனாவைத் தூக்க முடியாதவனாகவே வாழ்கிறேன். அதன் பின்னர் தினக்குரல் வழியாக மா. தேவகௌரி எனது படைப்புகளுக்கு ஊக்கமளித்தார். அதன் பின் (தினக்குரல்) பாரதி இப்படிப் பலர். இவர்களெல்லாம் பூபதியால் அறிமுகமானவர்கள் என்பது உண்மை. சில்லையூர் செல்வராஜனின் கவிதைகளிலும் அதிக நாட்டம் கொண்டிருந்த நான் 1991-1992களில் 'பாவளம்' நிகழ்வுகளில் அவரோடு பங்கேற்றேன். அவர் கவிதை பாடும் விதங்களைக் கவனித்து வந்தேன். இதனால் இலங்கை வானொலியின் புதுவருடக் கவியரங்குகளில் பல தடவை பங்கேற்றுள்ளேன்.

என்னை ஒரு திடப்படுத்திக் கொண்டே கவிதை நூலை வெளியிடக் காத்திருந்தேன். திக்குவல்லை கமால், அமரர் ராஜ ஸ்ரீகாந்தன் ஆகியோர் பலமுறை கவிதை நூல் போடுவது பற்றி ஞாபகப்படுத்தி வந்தனர். அண்ணன் ராஜ ஸ்ரீகாந்தன் தனது கடைசிச் சித்திரை வருடப் பிறப்பன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு வாழ்த்துக் கூறிய பின் "உனது கவிதைகளைக் கொண்டுவா தொகுத்து வெளியிடுவோம்" என்றார். அதுவே அவர் என்னுடன் கடைசியாக பேசிய வார்த்தையாகும். அவரது பிரிவு என்னைப் பெரிதும் வாட்டியது. இருவரும் மிகவும் அன்பாகப் பழகியவர்கள். அது ஒரு பேரிழப்பாகவே இருந்தது. எனது அன்புக்குரிய எழுத்தாளர் தெணியான் அவர்களும் பேசும் போது வலியுறுத்தி வருவார். ஓமென்று சொல்லிக் காலத்தைக் கடத்தினேன். ஆனாலும் தெணியான் அவர்கள் என்னை விடுவதாக இல்லை. அன்பாக நச்சரித்துக் கொண்டிருந்தார். இதற்கிடையில் தனது பெயரை வெளிப்படுத்த விரும்பாத அன்பர் "நூலைப் போடு நான் பணம் தருகிறேன். புத்தகம் விற்ற பின் பார்ப்போம்" என முன் வந்தார். எனக்கு எப்போதும் கைகொடுக்கும் அவரைச் சங்கடப்படுத்த விரும்பவில்லை. அந்தப் பெயர் குறிப்பிடாத மனிதர் என்றும் என் மனதில் இருப்பார்.

இப்படிப் பலவகையாகச் சிந்திக்கையில் என் சமகாலப் படைப்பாளி நண்பர் ஷெல்லிதாசன் அவர்களுடைய கவிதைத் தொகுப்பையும் பார்த்தேன். அப்போ எனக்குள் ஒரு நம்பிக்கை வந்தது. கவிதை தொகுப்பு ஒன்று வெளியீடு செய்வது பற்றி எனது வீட்டில் எல்லாருமாக கதைத்தோம். எனது மகன் சஞ்சயன் அதற்கு உடன்பட்டு வெளியிடுங்கள் என்றார். அந்த வேளையில் தான் எனது ஆப்த நண்பன் மேமன்கவி "மச்சான் ரவி ஒண்ட கவிதைத் தொகுப்பையு போடுவம்" என்றான். அங்குதான் நட்பின் தன்மை புரிந்தது. சும்மாவல்ல முப்பத்தெட்டு வருடத்திற்கு முன்பு எனது மாமனார் குணசிங்கம் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு நட்பாகிய 'அப்துல் ரசாக்' என்ற மெல்லிய சிவத்தப் பையன் நினைவுக்கு வருகிறான். அவன் என்னை அடையாளம் கண்டது மல்லிகையில் வந்த 'அந்த ரயில் போகிறது' கவிதையூடாகவே! அப்போ அவன் மல்லிகையின் வாசகனாகவே இருந்தான். இன்று அவன் பேசப்படும் கவிஞன். அவரிடம் எனது கவிதைகளைக் கொடுக்க கொடகே புத்தக ஸ்தாபனமூடாக வெளியீடு செய்ய முன் வந்துள்ளார். நீண்ட கால நட்பின் அன்பு வெளிப்பாடாக அவரது இம் முயற்சி எனலாம்.

எனது கவிதைகளை புதுக் கவிதைகள், கவித் துளிகள், மெல்லிசைப் பாடல்கள் என மூன்று வகையாய் பகுத்துள்ளேன். இதில் மெல்லிசைப் பாடல்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டு வரும் பாடல்களாகும். எனக்கும் மரபு சார்ந்த இசைப் பாடல்களை வடிக்க முடியும் என்பதற்காகவே அவற்றையும் பதிவாக்கியுள்ளேன். இசையமைப்பாளர் ஏ.மகேந்திரன், ஜவாஹீர் ஆகியோரின் இசையமைப்பில் உருவாகிய பாடல்களே இவையாகும்.

அணிந்துரை வழங்கிய மூத்த எழுத்தாளரும் எனது கவிதைகளை செம்மைப்படுத்தியவருமான என் அன்புக்குரிய தெணியான ஆசிரியர் அவர்கட்கும், வாழ்த்துரை வழங்கிய அன்பு ஜவஹர்ஷா அவர்களுக்கும் அட்டைப்படம் வடிவமைப்பு ஆகியவற்றை சிறப்பாக வடிவமைத்த மேமன்கவி அவர்களுக்கும்,எனது கவிதைகளைப் பிரசுரம் செய்த பத்திரிகைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகைகட்கும் இந்நூலை வெளியீடு செய்து வைத்த எஸ்.கொடகே சகோதரர்கள் நிறுவனத்திற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனது புகைப்படத்தை வடிவமைத்த தோழர் நடராஜா சரவணனுக்கும் (நோர்வே) எனது நன்றிகள்.


568/2/1, அளுத்மாவத்தை வீதி
கொழும்பு- 15.
0112527215
0773128378

சிவானந்தபவனம்
அல்வாய் தெற்கு
அல்வாய்.


11.2.2011

## உள்ளே.....


அந்த ரயில் போகிறது............25
மனத் திரைக்குள்...............27
பாதை..........................28
முற்றத்து மல்லிகை.............30
புதிய கதை பிறக்கிறது..........31
போலிகளை இங்கு தேடுது பார்.33
சாவு வந்ததோ...................34
வள்ளம் வரவேண்டும் ............36
முளையிலே கிள்ளல்.............38
இயல்புநிலை....................40
கையடக்கத் தொலைபேசி........42
உயிருக்குயிரான உறவுகள்.......43
உள்ளக் குமுறல்................44
புரியாமை புரியும்!...............46
நயந்துரை......................48
எனது ஆல்பம் ...............49
எழுத்து........................50
தலையாகை.....................52
அடிமைக் கரங்கள்..............53



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவை மீட்டியார்!............54
அழித்தெழுதல் ....................55
போலி வாழ்[illegible]....................57
நடத்தல் ..........................58
புதியன புகுதல் ....................60
புலம்பெயர்ந்[illegible]ன் கடிதம்......61
வல்லமையை வந்து பார்த்திடுவாய்....64
துயர் தரிசனங்கள்...............66
ஒற்றுமையே பலம்...............68
பிறந்தது மண்ணில்..............69
எங்களது பல்கலைக்கழகம்......71
உடைந்த நாற்காலியும் நானும்.73
பாம்பு சாகவில்லை!..............75
முரண்பாடும் முற்றுப்புள்ளியும்...77
மக்களோடு பேசு!.................79
அடங்கா திமிர்....................80
பூட்டு..................................82
மீண்டு வந்த நாட்கள்...........83
கவித்துளிகள்.....................85
மெல்லிசைப் பாடல்கள்...........95

# அந்த ரயில் போகிறது

கோட்டை ரயில் நிலையம்
குழுமியுள்ள மக்கள் கூட்டம்
நாட்டை விட்டேகுதற்கு
நாற்புறமும் சனநெருக்கம்
தலைமன்னார் புகைவண்டி
தயங்கி அழுதழுது
நிலையத்துள் அசைந்து வந்து
நின்றவுடன் சோககானம்
பாடுபட்டு உழைத்ததனால்
பச்சை ரத்தம் செத்ததின்றி
பலனென்ன கண்டோமென்று
நாடுவிட்டு அகதிகளாய்
நம்மிதயத் தொழிலாளர்
நாவசைக்க ஈரமின்றி
நல்லிதயம் குமுறுகிறார்.
காதலனைப் பிரிந்து செல்லும்
காதலின் உயிர்த்துடிப்பு
தலைமகனைப் புதைத்த மண்ணை
தடவி முகர்ந்து விட்டு
மதலை மொழிக் குழந்தையழ
மார்பணைத்துப் பால் கொடுக்கும்
அபலைப்பெண் அழுதழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுகிறாள் ரயில் தனிலே!
உள்ளும் நிறைந்த இருள்
எதிர்கால உலகுமிருள்
கள்ளமில்லாதுழைத்தவர்கள்
கலங்கி மனம் புழுங்க
அந்த ரயில் போகிறது
மனப் புகையை கக்கிறது

**மல்லிகை**
யூன் 1972



# மனத் திரைக்குள்....

மனத்திரைக்குள்
மறைந்திருக்கும் நீ.

சின்னஞ்சிறு பருவத்தில்
சேர்ந்து நாம் இருந்தோம்.
எண்ணம் போல் விளையாடி
எங்கும் திரிந்தோம்.
யுத்தமெனும் கொடுமையால்
நாங்கள் ஒவ்வொருவராக
இடம்பெயர்ந்து சென்றோம்.

ஆண்டுகள் பலவாக எங்கள்
முகங்கள் மறந்து போனோம்
எமக்கேற்றவாறு தகுதிகளை
வளர்த்துக் கொண்டோம்.

எங்கள் உறவுகள்
பிரிந்த இடைவெளிகள்
விரிந்து விரிந்து போனாலும்
நீ மனத்திரைக்குள்
மங்காது வாழுகின்றாய்!
எங்கள் அன்பை
எவருக்கும் புரியப்படுத்தாமல்
மனத்திரையுள் மூடிவைத்தோம்.
திரை இன்னும் மூடித்தான் இருக்கிறது.
யாருக்கும் தெரிவதில்லை
எம் இருவரை விட.....

**'யாதும்'**
கனடா குளிர்கால ஒன்று கூடல
சிறப்புமலர் 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதை

கால் பதித்து
நடக்க இயலாத
சின்னப் பாதை!
இருவர் நடந்தால்
ஏற்படும் உரசல்கள்!
சின்னக் குழந்தைகள்
தவழ்ந்து வந்து பாதத்தில்
இடர்படுவர்!
இருமருங்கும் வீடுகள்.

தாழ்வாரத்தில் உலரவிட்ட
ஆடைகள்
சேரியின் கண்ணீராக
வடிக்கும் நீர்த்துளிகள்
குச்சுவீடுகள் சிலவற்றின்
வாசலில் நின்று
கசிப்புக்காரர்கள்
கண்காட்டி அழைப்பார்கள்!
இந்தப் பாதையிலும்
சிறுபிள்ளைகள் பந்தடிப்பர்.
புறாக்கள் கூடிவந்து



வீட்டின் கூரைகளில் தான்
கூடு கட்டி தஞ்சம் புகும்!
அப்பக்கார அக்கா
வழியில் தினம் தினம்
சுகம் விசாரிப்பார்!
சின்னக் குமரிகள் சிலர்
ஒட்டுப் பொட்டிட்டு
சுகம் கண்டு
சுமங்கலிகளாய்
காட்சி தருவார்!
இன்னொரு அதிசயமாக
சிறுவருடன் பஜனைபாடும்
பெரியவரின் குரல் கேட்கும்!
வாழ்வின் நெரிசலுக்குள்
வறுமையுடன் போராடும்
ஏழை எளியவருக்காக
என் இதயம் ஏங்கும்

**வீரகேசரி**
02.06.1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றத்து மல்லிகை

முத்துச் சிதறல்களாய்
முதிராத பனி அமுதாய்
முற்றத்து மல்லிகையே
மோகனமாய் கூத்திட்டு
சித்தம் கவர்ந்தெந்தன்
சிலு சிலுத்த உணர்வுகளில்
சித்திரைப் பூங்காற்றாய்ச்
சிரித்த சிறுமலரே!

வண்டுகள் பறந்து வந்துன்
வாயமுதத் தேனுண்டு
வாச நறு மிதழில்
வட்டமிட்டு வட்டமிட்டே
நின்று நினைவிழந்த
நெஞ்சமதில் மயக்கமுற்று
நித்திரையாய் போனதையும்
நானறிவேன் நானறிவேன்.

பனி உறைந்த உன் இதழ்கள்
பால்வெண்நுரைச் சிதறல்
பன்னீரின் வாசனையில்
பருவ எழிற் கன்னியவள்
தனியழகு, திருமணத்தில்
தாலியுடன் மாலையெனத்
தானிருப்பாயென நினைத்தேன் நீயோ
வீதியிலே வீழ்ந்திட்டாய்?

தினபதி
17.06.1978



# புதிய கதை பிறக்கிறது

"நாம் வர
வந்திருக்க!
நமக்கு என்ன வேணுமாக்கும்?"
என்று சால்வையை
அக்குளுள் வைத்து
கேள்விக் குறியாய் வளைந்து
நயினார் முன் நிற்க;

"எட செல்லன்
உன்ரை கருப்பணி
உருசையடா!
ஒரு முட்டி வீட்டை
கொண்டுவா"
எனச் சாற்றுகிறார்
அவர் பெரியவர்.

"ஐயா நான் சீவிறேல்லை
மகன்தான் சீவிறான்
அவனிடம் சொல்லுகிறேனாக்கும்
நாம் வர....... வர....."
என்று அவன் குழைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுபட்டி தளநாருடன் வந்தமகன்
"என்ன காணும்
அடிமை குடிமைகள் என்ற நினைப்போ?
நாமும் மனிதர்கள் தாம்.
பழைய நயினார் காலம்
பாறி விழுந்துட்டுது.
எங்கள் உழைப்பை இன்னும் உறுஞ்சவா
எண்ணுகிறீர்?
வையும் பணத்தை; விரும்பினால்
தூக்கும் முட்டியைக் கையில்"
என்று கீழே வைக்கிறான்.
நயினார் பார்க்கிறார்
புதுமையாக அவனை.

**மல்லிகை**
**யூலை 1974**



# போலிகளை இங்கு தேடுதுபார்

பூத்துக் குலுங்கும் உலகினிலே
போலிகள் ஆயிரம் தெரியுதுபார்.
ஏய்த்து பிழைத்து வாழ்கின்ற
எத்தனை இரகங்கள் உள்ளதுபார்!

அங்குமிங்கும் கடன் வாங்கி
ஆயிரம்பொய்கள் சொல்லி வைத்து
என்றும் வாழ்வை கொண்டிருக்கும்
எத்தர் கூட்டம் வாழுதுபார்.

சாமியின் பெயரை கூறிவைத்து
சரியாய் பணத்தைக் கறப்பதற்கு
ஆசாமிகள் நாட்டில் உலாவுதுபார்;
அறிவினால் ஆனந்தம் காண்பதைப் பார்!

அண்ணனும் தம்பியும் சண்டையடா
அவருள் வட்டியும் முதலுமே சர்ச்சையடா
அன்புகள் மறந்து மோதுதடா
அவர் ரத்தங்கள் ஒன்றாய்ப் பாயுதடா!

அரங்கினில் நடித்த ஆற்றலினால்
அவனியில் நடித்தே தள்ளாடுகின்றார்.
இரக்கமில்லா உலகமிதில்
உள்ள போலிகளை இங்கு தேடுதுபார்.

**வீரகேசரி வாரமலர்**
18.04.1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவு வந்ததோ

எனது பிறந்த மண் சுடுகாடாச்சு
இனிமேல் சுடுகாடென்றே அழைக்கலாம்.
மக்களை வாழ வைத்தது அந்தச் சந்தை.
பஞ்சம், பசி போக்கிய அமுதசுரபி!
சிதைந்த உடலமாக
எலும்புக்கூடாக செத்துக் கிடக்கிறது.
பழம் சொரி மரங்கள்
பாறி விழுந்தன.
நான் பிறந்தமண்
மரணித்துவிட்டது.

வாழ்ந்தவர்கள் மடிந்தார்கள்
அகதிகள் ஆனார்கள்.
உடுத்த புடவையுடன்
அடுத்த ஊர்கள் தஞ்சமானார்.
கண்ணீர் சொரிகின்றார்கள்.
வந்த இடங்களிலும்
உயிர் வாழ வழியில்லை.
கொலை அரக்கனின் கோரக் கரங்கள்
ஷெல்லாக விழுகிறது.
வண்டு துளைக்காத மாம்பழங்கள்
குண்டுகள் விழுந்து சிதறினவே!



எங்கள் தெய்வங்கள் எல்லாம்
சிறைப்பிடிக்கப்பட்டனவோ!
வேற்றூரில் வாழும் நாம்
சிறைவாசம் புரிகின்றோம்.
சாகாவளம் கொழிக்கும் சாவகச்சேரியே
சாவு வந்ததோ உனக்கு!

**தினக்குரல்**
**08.10.2000**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளம் வரவேண்டும்

வள்ளம் வரவேண்டும்
வந்து கரைசேரவேண்டும்.

வள்ளம் கரைசேர்ந்தால்
வாய்க்கு ருசியாக மீன்
வாங்கிச் செல்ல வல்ல
வள்ளம் வருவதற்காய்
மெல்லத் தொலைவில் நின்று
துள்ளிப் பார்க்கின்றேன்.

வள்ளம் வரவேண்டும்
வந்து கரை சேரவேண்டும்.
வந்து போவோர்க்கு
வகையாய் வியாபாரம்
நொந்து போகாமல்
நொடிப் பொழுதில்
செய்து விட்டால்
இங்கு பணம் தேறும்
இதற்காய் நான்
இன்றும் அதிகாலையிலே
என்தன் கடைவாசலிலே
நின்று பார்க்கின்றேன்.



வள்ளம் வரவேண்டும்
வரவைப் பார்க்கின்றேன்.
கடனாய் பொருள் கொடுக்க
காசாக்கி கொண்டுவரும்
கனகசபையும் வருவார்!
வள்ளம் வந்து போனால்
எல்லாம் நன்மையாகும்.
எங்கள் நகரம் தான்
எல்லோரும் கடக்கவேண்டும்.
வள்ளம் வந்துவிட்டால்
உள்ள பொருட்கள் எல்லாம்
ஒன்றாகச் சேர்த்து கட்டி
நல்லவிலைக்கு வாங்கும்
நமது வியாபாரிகள்
எல்லோரும் வந்திடுவார்
இன்று வள்ளம் வரவேண்டும்!

**வீரகேசரி வாரமலர்**
24.10.1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முளையிலே கிள்ளல்

சந்தியின் ஒருமூலையிலே
சிறு கன்று துளிர்விடுகிறது.
தினமும் பார்த்து செல்கிறேன்.
நாளுக்குநாள் வளர்கிறது.
இப்போ அது என்ன மரக்கன்றென
எனக்குப் புரிகிறது.
நான் கல்வி கற்கும் நாளில்
புத்தகத்துள் வைத்து
"பாடம் தா" எனவேண்டி
அழகு பார்த்தது.
நாளடைவில் இலையின்
நரம்புகள் மட்டும்
அழகாய் தெரிய

மற்றவை காய்ந்திருந்தது.
நினைவில் வர..... நான்
விடியும் வேளை எழுந்து
மெல்ல அவ்விடம் செல்கிறேன்.
மாட்டுச் சாணங்கள்...... அதனருகில்
அச் சிறுகண்டு இல்லாமல் போய்விட்டது.
ஏமார்ந்த நான்
வேதனையும் நிம்மதியும்
அடைந்த நிலையில்........



மரம் பெருத்து வளர்ந்தால்
நிச்சயம் நிழல் தரவேமாட்டாது.
விசாகப் பெருநாளும், சாப்பாட்டு
பந்தலும் சங்கமம் ஆகும்.
போதனை போதித்தவர்
மௌனித்து சிலையாகிவிடுவார்.
போதனை உபதேசம்;
வன்முறை பேச்சு சொல்லும்
பாதை கூட நெருங்கிச் சாகும்.
அந்த இளங்கன்று
முளையிலே கிள்ளப்பட்டதால்
நாளைய வரலாறு ஒன்று
நசுக்கப்பட்டுவிட்டது.

ஞானம்
பெப்ரவரி 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல்புநிலை

எங்கள் பாரம்பரியத்தை
துலக்கிய கிடுகுவேலிகள் சரிந்து
சருகுகளாகத் தென்படுகின்றன.

கடும் உழைப்பில் கட்டிய பெரிய வீடுகள்
கற்குவியல்களாகக் காட்சிதருகின்றன!
வேலிகளுக்கு பதிலாக
மண்மேடுகள் வளருகின்றன.

அடுத்த கிராமம் செல்வதற்கு
அனுமதி கோரவேண்டும்.
திருடர்கள் மீண்டும்
வந்து விட்டார்கள்
எல்லைகள் தேடலில் எமக்குள்
சர்ச்சைகள் வளருகின்றன!

பழைமைக் குணங்கள்
சிலரிடம் மீள தலை நீட்டுகின்றன.
சாதிப் பூசல்கள் வாந்திபேதியாய்
வந்து கொண்டு தான் இருக்கிறது



பசிக்கும் போது;
காசுகள் கைமாறும் போது
அதில் சாதி மறக்கப்படுகிறது.
நல்லொளிகள்
இடைக்கிடை வந்து போனாலும்
விழிகள் பயந்துதான்
பார்வையைச் செலுத்துகின்றன.

உண்மைதான்
பழைய இயல்புநிலை
மண்ணுக்கு மீண்டும் வந்துவிட்டது.

**வீரகேசரி**
08.09.1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையடக்கத் தொலைபேசி

சிந்தனைகள் சிறகடிக்கும் காலமதில்
சீரான தொடர்புகளை ஏற்படுத்த
எந்தனுக்கும்கையடக்கத்தொலைபேசியொன்று
எப்படியும் தேவையென எண்ணுகின்றேன்.

வேண்டியதை உடனுக்குடன் அறிந்திடவும்
வேண்டுமெனில் விருப்போடு சந்திக்கவும்
தூண்டுமந்த தொலைபேசிச் சேவையாலே
துடிப்போடும் பாதையிலும் பேசிடலாம்.

காதலுக்கும் கைகொடுத்து நின்றிருக்கும்
கண்ணிமைக்கும் நேரத்தில் செய்தி சொல்லும்
மோதலுக்கும் உதவுகின்ற தொலைபேசியாலே
மோகங்கள் கொண்டிங்கு வாழ்கின்றோம்

பாவனையில் இல்லாத தொலைபேசியினாலும்
பத்திரமாய் கையினிலே வைத்திருந்து நாளும்
பாவனைகள் பண்ணிப் பேசவேண்டுமென
பல நாளாய் நானும் எண்ணுகிறேன்.



# உயிருக்குயிரான உறவுகள்

இதயத்தில் எழுதிய கவிதையிது
என்றும் பதிந்து நிலைக்கிறது.
பதிப்பினில் கவிதைகள் பலவடித்தும்
இதயத்தில் பதிந்ததே நிலைக்கிறது.

ஆயிரமாயிரம் எண்ணங்கள் அதில்
ஆண்டவன் வகுப்பதே திண்ணங்கள்
தாயவள் அணைப்பினில் வளர்ந்தாலும்
தரணியில் விதித்ததே வாழ்வாகும்.

வாழ்வினில் தரிசனம் பலவருமே
வருபவை எல்லாம் பயன்தருமா?
ஆழமாய் ஒன்றுதான் நிலைத்திடுமே
அன்பினால் வாழ்வு மலர்ந்திடுமே!

பண்புடன் வாழ்வது பலருடனே
பாசத்தை வளர்த்தல் சிலருடனே
காதலின் நினைவுகள் மறைவதில்லை
கண்களிலிருந்தும் பிரிவதில்லை.

ஆயிரம் உறவுகள் தேடிவரும்
அன்பினை பொழிந்து மறைந்துவிடும்
உயிருக்குயிரான உறவுகளே
உண்மையில் நிலைத்து நின்றிடுமே!

ஞானம்
ஜூலை 2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக் குமுறல்

நாட்டின் வீதியிலே
எனது வாழ்வு!
தூண்டும் பசிக்கு
தூது என் கரங்கள்!

வெள்ளையாடையில்லை
வெள்ளை மனமுண்டு
பள்ளி சென்றறியேன்
படிப்பில்லை என் வாழ்வில்!
இருள் சூழ்ந்த வாழ்வினிலே
ஒளிபுகாக் குடிசைதனில்
உறவின்றி கிடப்பவள் நான்

என்தன் இடரகற்ற
எத்தனை எத்தனை சீமான்கள்
முன்னே வந்து நின்று
முகங்காட்டி நின்றார்கள்
பக்க உதவி தந்து
வயிற்றை நிறைத்தார்கள்
வாரிசைத் தந்தார்கள்
நாயாக அலைந்தயெனை



தாயாக்கி வைத்துவிட்டு
வெள்ளை உடையணிந்து
வீதியிலே செல்கிறார்கள்
அள்ளிப் பருகியோர்கள்
அடக்க வருவாரோ!
உள்ளக் குமுறலிதை
ஒழித்திடவோ யார் வருவார்.

**மல்லிகை**
செப்ரம்பர்- 1974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரியாமையும் புரியும்!

கடிதம் எழுதுவது
கை வந்த கலை!
காதல் தூதுக்கும்
கடிதம் கரம் கொடுக்கும்!
கையில் அகப்பட்டால்
கவலை மிகக் கூடும்
கண்ணீர் கூடவரும்!
கடன்கள் கொடுத்தவர்கள்
காலம் கடந்த பின்னர்
கடிதம் தூது விடுவார்-அதில்
காரம் சுமந்து செல்லும்!
உறவுள் பகை தொடுக்கும்
உடன் கடிதம் சீறிவரும்.
உறவு மறந்தங்கு உள்ளே
பகைமை வளரும்!
திறமை பல உண்டு
திறமை பல உண்டு.
கூர் தீட்டி மடல் வரைய
திறமை பல உண்டு.
தீ மூட்டும் எழுத்தினிலே
உள்ளம் கொதித்துவரும்.



ஏசிக் கடிதங்கள்
எழுதுவது பெரு-மை அல்ல;
எதற்கும்
பொறு-மை வேண்டும்!
தான் முன்பிருந்த
சிறு-மை எண்ண வேண்டும்!
தாக்கி மடல் வரைதல்
தகைமையல்ல; அறியாமை!
பேனாமையில் மையல் கொண்டு
பெருமனதால்
எழுதில் புல-மை வரும்.
வயதில் முது-மை தரும்.
இதனால்
புரியாமை புரியும்.

வீரகேசரி வாரமலர்
15.11.1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயந்துரை

ஊருக்குபதேசம் செய்யும் உயர் மனத்தான்
யாருக்கும் உதவி செய்யான் தன்
பெயருக்கு முன்னும் பின்னும்
ஈரெழுத்து பட்டமிட்டு பலகாலும்
பறக்கவிட்டான்!
பாமரர்கள் தமக்குள்ளே வினவிக் கொண்டார்.
படிக்க முடியாதோர்க்குக் கிடைப்பதுவோ
முன்பட்டம்.
ஓடி அலைவோர்க்கு தேடிக்கொடுப்பது
பின்பட்டம்'
நயந்துரைத்தார் நகைப்பாக.

**தினக்குரல் வாரமலர்**
24.06.2001



## எனது ஆல்பம்

வரன்கள் வந்து வந்து
என்னைப் பார்த்துச் சென்றனர்.
தரகரும் வெளிநாட்டுக்காரரும்
என் புகைப்படங்களை
கேட்டுப் பெற்றனர்
தந்து போனதில்
எனது ஆல்பம்
நிறைமாதக் கர்ப்பிணியாக
நிறைந்து கனக்கிறது.
ஆனால்
இல்லாதது எனது புகைப்படம்
ஒன்றுதானும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்து

அந்தச் சந்தை
சுவர்கள் சூழ்ந்த
பெரிய சந்தை!
ஜனங்கள் உள்ளே
போவதும் வருவதுமாக.....
பொதிகள் தூக்கும்
பக்கம் ஒரு பரபரப்பு.

"வடக்கத்தையாள்
போடி வெளியிலை"
என்ற குரல்
காதைத் துளைக்கிறது.
ஏரம்புத் தடியன்
வள்ளியின் முடியை
கையால் இழுத்து
நிலத்தில் விழுத்தி
அவள் சுமந்த



பொதியைத் தான்
தலையில் வைத்து
தூக்கிச் செல்கிறான்!

இவள்
கண்டியில் வாழ்ந்த
இந்திய வம்சம்
இனக்கலவரம்
அகதிகளாக்க
இனத்துடன் சேர்ந்து
உழைத்து வயிறு
கழுவ வந்தவள்!

சந்தைச் சுவரில்
"தமிழினமே ஒன்றுபடு"
தேர்தல் காலக்
கோஷ எழுத்து
பெரிதாகத் தெரியுது!

மல்லிகை ஜஜீன்
1979

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைப்பாகை

பலபேர் சேர்ந்து
தலைப்பாகை கட்டினர்.
பம்பரம் போலப் பரமசாமி
சுழன்று நின்றார்!
எந்த இடத்திலும்
எடுத்து விசுக்குவார்!
கேட்பது கொடுக்கும்
இறைவனுமானார்!
காலங் கடந்து
கணக்குப் பார்க்கையில்
விட்டிறைத்தவைகளைத்
தேட முடியாமல்
தெருவுக்கு வந்தார்
சும்மா அல்ல
தலைப்பாகையுடன் தான்!
ஆனால்
தலைப்பாகை கையில்
பிச்சை வாங்குகிறது.



# அடிமைக்கரங்கள்

இளவரசன் மனைவியான
இளவரசியாள்
இறந்து போனாள்
இதயபூர்வ அஞ்சலிகள்!
மலர்வளையங்கள்
மலையாகக் குவிந்தன.
இன்றோ இளவரசனுக்கு
இன்னொரு சுயம்வரம்.
அதே கரங்கள்
அள்ளிச் சொரிகின்றன மலர்கள்.
வாயார வாழ்த்தி வரவேற்பும்
செய்கின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவை மீட்டிப்பார்!

ஓலைக் குடிசையிலே
நீங்கள்
ஒன்பது பத்துபேர்
சுருண்டு படுத்த நாட்கள்.....
காலைக் கடனுக்காய்
கருக்கலுக்குள் எழுந்து
கழிக்கச் சென்ற நாட்கள்
மதிய உணவுக்காய்
மல்லுப்பிடித்த நாட்கள்
எல்லாம் நினைவில் நிற்கிறதா?
இன்று நீ வெளிநாட்டுப் பிரசை
அதனாலோ பெயரையே மாற்றிவிட்டாய்
இந்தநாடு இன்றுனக்கு
சரியான 'Hot' என்கிறாய்!
வீடோ 'டேட்டி' என்கிறாய்!
இந்த நாடும் இந்த கிளைமேற்றும்
உனக்கு நினைவிலிருக்கிறதா?
நினைவை மீட்டிப்பார் மகளே!
இது நீ பிறந்தமண்!

**வீரகேசரி வாரமலர்**
27.09.1992



# அழித்தெழுதல்

வெண்ணிலவின் ஒளியதினில்
விரல் வைத்து மணல் மீது
தன்னாசைக் கேற்ற வண்ணம்
தமிழ் எழுதித் தமிழ் எழுதி
தயக்கமின்றி அழித்தெழுதி
அவனோர் பண்டிதனானான்.

வீட்டினைச் சுற்றிவர
விரவி நின்ற புல்பூண்டை
கூண்டோடு அழித்ததனை
கூட்டியே சுத்தம் செய்து
சுற்றுப் புறமெல்லாம் இப்போ
சுந்தரமாய் திகழ்கிறது.

அடிதடி சண்டையிலே
அசகாய சூரனென்று
தெருவழி போவோற்கெல்லாம்
தீமைகள் விளைத்தோனை
சிறுபையன் ஒருத்தன் சீற்றமுடன்
சிறுகல்லால் அழித்தொழித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் காலத்துப் பயிரென்று
பாயிரம் பாடிப் புதுவாழ்விற்கு
புகழுரைத்த பெரியோர்கள்
சேயினமோ இன்று சிறுபிள்ளை
வேளாண்மை போல் தினம் தம்வாழ்வை
அழித்தெழுதுகின்றார்.

அழித்தெழுதல் என்பது
அங்கங்கள் துளைபட்டு-குருதி
ஆறாகப் பாய்ந்தின்று
தெருத்தெருவாய் நடக்கிறது.

**தினக்குரல் வாரமலர்**
04.09.2005



# போலி வாழ்வு

பட்டு வேட்டி
சால்வை கட்டி
பதக்கம் சங்கிலி
கழுத்தில் மாட்டி
இடுப்பினுள்ளே
'ரோச் லைற்'
செருகி வைத்து
திருவிழா
திறமாய்ச் செய்கிறார்
திருநாமம்!
அவரின் மனைவி
வெளுறல் சேலைகட்டி
நகைகள் எதுவுமற்று
வயல்வெளியில்
ஒதுங்கி நின்று
திருவிழா
பார்க்கிறாள்.

**வீரகேசரி**
11.11.1981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடத்தல்

விடிகாலை.....
பறவைகளின் ரீங்காரம்
வீட்டு நாய்களின் குரைப்பு
வேலைக்கு போகும்
சில தொழிலாளிகள்
இவர்களிடையே-
வீதிகளிலும்
கடற்கரையோரங்களிலும்
களைத்து விழுந்து
கை, கால் அகட்டி
மனிதர்கள் நடப்பர்.
தேகசுகத்தில் அக்கறை கொண்டு
தினமும் இவர்கள் நடந்தே கொள்வார்.
புதியவர் சிலபேர் வந்து சேர்வார்.
பழையவர்களும் பாதையில் நடப்பர்.
கடற்கரையோரம் கால்கள்
கைகள் உயர்த்தி
தேகப்பயிற்சி செய்கின்றார்கள்
வந்தவர் சிலபேர்- மீண்டு
வராமலே போய்விடுவார்கள்.
வருபவரெல்லாம் மகிழ்ச்சியோடு



பயிற்சிகள் செய்வர்.
இளமைப் பருவத்தில்
இவற்றை எண்ணாத இவர்கள்
முதிரும் போது; வளைந்து கொடுப்பார்.
முதிர்ச்சி என்பது
மனதினில் தெரியும்
நடையினில் இல்லை.
நடத்தல் என்பது
பயணத்தின் இறுதிப்படியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியன புகுதல்

காய்த்துப் பூர்த்து
கலகலத்த மரங்கள்
நேற்று முடிந்த போரில்
மொட்டைகளாய்
காட்சி தருகின்றன!

இடிபாடுகளில்
அரையும் குறையுமாய்
வளர்ந்த கன்றுகள்
இன்று பூத்து புன்னகை புரிகின்றன.

மொட்டை மரங்கள்
பழைய வரலாறுகளை
எண்ணிக் கலங்குகின்றன!
இளம் கன்றுகள்
இனிய கனிகளை தந்து
புதிய வரலாற்றை
பதிவு செய்கின்றன!

ஞானம்
ஜுலை 2005



# புலம்பெயர்ந்தவனின் கடிதம்

அன்புள்ள நண்பா!
நன்றி தெரிவித்து
நான் தொடர்கின்றேன்
காலத்தால் முன்வந்து
இங்கு வாழ்வோர் பலர்
பணமுடனே வாழுகின்றார்!
சோகத்தை கேட்பதற்கு நேரமில்லை.
சோலிகள் பல உண்டு!
வெள்ளைத்தோல்காரன்
விலகி நின்றாலும்
எம்மவர்கள் நெருங்கத்தான் பார்ப்பார்கள்.
வெள்ளைக்காரனுக்கும் எங்கள்
சாதி, சமயங்களை விபரித்து
சாக்கடையில் தள்ளுகின்றார்.
ஊரில் வாழ்ந்தது போல்தானிங்கும்
சாதித் திமிரும், சந்தி சண்டைகளும்.....
எல்லைத் தகராறுகளும் வந்திருக்கும்;
நல்ல காலம் இங்கு
எல்லாம் கட்டிடங்கள்
பட்சிகள் போல் பலர் பதுங்கி
பகலிரவாய் உழைக்கின்றார்.
உழையாது இருந்துவிட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலையும் எரியாதப்பா!
ஆதலினால்
பனியும் குளிரும் பார்த்திடாது
பாடுபட்டு உழைத்து;
'கலக்ற் கோல்' வரும்போது
காசு அனுப்புகிறேன் என்கின்றார்.
பொடியன் உறங்காதது
உங்களுக்குத் தெரியுமா?
உங்குள்ளோர் சோறு கறியுடன்
சோடாவும் குடிக்கின்றாராம்?
'பிரிந்துவாழுதல்' நாகரிகமாச்சு இங்கு;
அகதிப்பணம் எடுப்பதற்காய்
சில கணவன் மனைவி
பிரிவு கொள்கிறார்.
நினைவு மீளும்போது
இணைந்து கொள்கிறார்.
வயது வந்தும் வாலிபத்தை
கடக்கும் இளைஞர் பலர்
புதியவள் வருகைக்காய்
தினம் தொலைபேசி- பேசிப் பேசி
தொலைக்கின்றார் காசை;
பாசமழையில் காசனுப்ப
காசுடன் தொலைந்தவர்கள்.....
பாசம் பொழிந்தவனோ
பதறும் நிலையில் இங்கு!
எத்தனை கேளிக்கைகள்
எப்படிச் சொல்லுவது?



நல்லதா பெல்ஸ் என்று
நல்லம்மாக் கிழவி கேட்பா
டமில் வராதென்று
தங்கராசா சொல்வார்.
இத்தனை இடைஞ்சல்களிலும்
இங்கு தமிழ் வளர்க்கிறார்கள்!
திருமதியாள் ஊரில் உள்ளாள்
வெகுமதி எதுவுமின்றி திருமணம் புரிந்தவனாம்.
ஆண்டு ஆறாய்ப் போச்சு வாழ்க்கை!
ஆனாலும் திருமணநாள் தினத்தன்று
மனையாள் உருவத்தை பெரியபடமாக்கி
மாலை சாத்துகின்றார், கேக்கும் தீத்துகின்றார்.
இது திருமண நாளா? அன்றி நினைவு நாளா?
புரியவில்லை- இப்புதிர்தான்!
சறுக்கல்களைச் சொல்வதில்தான்
சந்தோஷம் நண்பா!
போர்தான் தொடருமுங்கு
பொதியெங்கோ மூலையிலாம்
ஆதலினால் இருக்கு மட்டும்
மகிழ்ந்து மடிவோம்!
இங்கும் நிம்மதியே இல்லை நண்பா!
கடும் உழைப்பு கட்டாயம் வேண்டும்.
அன்றேல் உங்குபோல் இங்கும்
கணக்கே எடுக்கமாட்டார்!
நன்றி முடிக்கின்றேன்.

தினக்குரல் வாரமலர்-07.09.1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லமையை வந்து பார்த்திடுவாய்

தினமும் நாம் கதைக்கின்றோம்
முகங்கள் தான் பார்த்ததில்லை.
தொலைபேசித் தொடர்பாலே
பல மணி நேரம் பகர்கின்றோம்!
எனக்காக வந்திருக்கும் என்னவளே
உனக்காக என்மனதை பறிகொடுத்தேன்.

தலைநகரில் இருக்கின்றாய் தனிவீடுமல்ல
பலபேர்கள் தங்கும் பாரிய விடுதிதான்;
கண்களால் கதை பேசி
பெண்களைக் கவர்ந்திடுவார்.
வேண்டாத நட்புகளை விட்டுவிடு
வேண்டியதை நான்
வாங்கி அனுப்புகின்றேன்
வயதேறிப் போனவர்கள்
வாலிபர்களாகின்றாரென
வந்தவர்கள் சொன்னதையும்
கேட்டிருந்தேன்!

கொழும்பினில்
கூட்டமொன்று இருக்கிறதாம்
அழகாகக் கதைத்து



ஆட்களை மயக்கிடுமாம்.
வெளிநாட்டு உறவினரின் பணம் கறந்து
வழிநெடுகச் செலவழிக்கும் வல்லவராம்!
சோறு கறியோடு சோடா குடிக்கும்
மாற்று மருந்து கண்ட மானுடங்கள் பல
நூறு உண்டென்றறிந்தேன்.
பாவையரை பல வயதானவரை
பக்குவமாய் வழிநடத்தும்
மன்மதராசன்கள் மலிந்த இடமென்று
என்னருமை நண்பர்கள் சொன்னார்கள்!
சின்னவளே சிங்காரப் பூங்கொடியே!
என்னருகே வரும்வரையும்
உன் மனதை மாற்றிடாதே!
எல்லாத் திறமைகளும்
என்னிடத்தில் உள்ளதடி
வல்லமையை வந்து பார்த்திடுவாய்.

**வீரகேசரி வாரமலர்**
21.11.1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் தரிசனங்கள்

வயதான தாயின் மரணம்
சாவீட்டு ஓசையாக.....
பிள்ளைகள் உறவினர்கள்
அருகிருந்து புலம்புகின்றனர்.

அவர்களுள் ஒரு மகள்
யாரைப் பார்த்து அழுவதென
ஏங்கிக் கொள்கிறாள்!
இன்றோ நாளையோவென
இவளின் கணவனும்....
இந்தச் சாவீட்டில்
போராடுகின்றான்!
கணவன் அருகிருந்து
காரியம் பார்த்தவள்
மறுகணம்- தாயின்
வெற்றுடலருகில் சென்று
விழுந்து அழுகின்றாள்.
நோயான இருவரையும்
நாளாந்தம் பார்த்து
தோலாகிப் போன அவள் தேகம்.
தாயின் இழப்பிற்கு அழுவதா?



அன்றி
தனது வாழ்வு இழக்கப்பட போவதை
எண்ணி அழுவதா?
அவள் கேட்கிறாள்.
“ஆண்டவா எனை ஏன் படைத்தாய்?”
அதற்கு
“மகளே உன்னை இறைவன் படைத்தது
இவர்கள் கடமைகளை நீயே
நன்றே செய்வாய்
என்பதற்காகவே!
எத்தனையோ
காரியங்களை
நிறைவேற்றிவிட்டாய்.
இவைகள் உன் தரிசனங்கள்.
மிக உறுதியாக இரு!
இருவருமே உன்னவர்கள்
உரிமையானவர்கள்
உன் இறுதிக் கடன்களையும்
இவர்களுக்கு செய்வதற்காய்
திடமுடன் உன்னை
ஆயத்தம் செய்” என்றாள்
ஒரு வயதான மாது!

மல்லிகை
ஒக்ரோபர்-2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையே பலம்

முகம் பார்த்து புன்னகைப்பு.
அகத்துள் ஏதோ ஒன்று
குத்திக் கொண்டிருக்கும்.
வரட்டுக் கௌரவங்கள்
வந்து மனதைத் தடவும்.
உதைபந்து உள்மனதில்
ஓடி விளையாடும்.
உலக கிண்ணத்தில்
விளையாடுவதாக நாம்!
அடிதடிகள் பட்டு
முகங்களை திருப்பும்- நாங்கள்
கொண்டாட்டங்களில்
உறவு பாராட்டி
கைகுலுக்கி மகிழ்வு காண்கிறோம்
ஒற்றுமையே பலமாக- உலகிற்கு
உயர்வாய் காட்டுகிறோம்.



# பிறந்தது மண்ணில்....!

தன்னுயிர் பிரியுமென்று
தானாக அவனுணர்ந்தான்
என்னாளும் நோயில்படுத்து
எல்லோரும் துயரில் வாட
எண்ணமே கொண்டானில்லை
மாறாது நோயென்று
மனதாலே நினைத்திருந்தான்.
தன் வாயாலே பேச முடியாமல்
தானாக துன்பமுற்றான்.
பேனாவால் எழுதி எல்லாம்
பேச்சாகக் காட்டி வைத்தான்.
தானே தன் கருமங்களெல்லாம்
தடையின்றி செய்தோனுக்கு
பேசிப் பேசி வாழ்ந்து விட்டு
பேசாமல் இருப்பதென்றால்
பிறகென்ன வாழ்வென்றுணர்ந்தான்.

விழித்திருந்து விடியும்வரை
எழுத்தில் ஆழ்ந்திருப்பான்.
எழுதிக் குவித்தவைகள்
எல்லாமே சேர்த்திட்டே
பத்திரமாய் தன்னவர்க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரப்படுத்தி வைத்தான்.
நாட்கள் சில மறைந்திட
நாள் ஒருநாள் தன்னவர்கள்
சூழ்ந்திருக்கும் போதினிலே
தானாக உயிர் பிரிந்தான்.
நாட்கள் சில கடந்து....
இவன் எழுத்தில் என்ன உள்ளதென
எடுத்துப் பார்த்தனர்.
“என் மரணத்தின் பின்” என்று
ஆழப் பதித்திருந்தது.
இறப்பு என்பது வாழ்வில்
இயற்கை என்பதனை
தன் எழுத்துக்களில் அவன்
மீளத் தெளிவுபடுத்தி வைத்தான்.
அகால மரணங்களில்
அழுது புலம்பும் எங்களுக்கு
அக்- காலமரணமானது
“பிறந்தது மண்ணில்
இறப்பதற்கென்றே” என்ற
நாடகப் பாடலை நடிகமணியின்
இனிய குரலில் கேட்பது போல ஒலித்தது.

**ஞானம்**
ஒக்டோபர் 2007



# எங்களது பல்கலைக்கழகம்

எல்லோரும் பெரிய படிப்புக்காக
பெரிய பெரிய பள்ளிக்கூடங்கள் மாறுகையில்
நாங்கள் எங்கள் பள்ளிக்கூடத்தில்
தரித்து நின்றுவிட்டோம்.
அப்போ, எங்களுக்கு வழிகாட்டிகள் யாரும்
இல்லாமல் போனார்கள்.
பத்தாம் வகுப்புவரை பாடம்
சொல்லித் தந்ததால்
கல்லூரி அந்தஸ்தும் கிடைத்தது.
கிராமத்துப் பிள்ளைகள் நாங்கள்,
பள்ளிக்கூடம் என்றே
அன்பாய் அழைப்போம்!
எங்கள் பள்ளிக்கூடம்- சிறிதாய் தோன்றி
பெரிதானதே ஒரு தனிக்கதை!
ஆரம்பம்- வளர்ச்சி; பல பங்களிப்புகள்
இன்று ஒரு நெடுமரம்.
இப்பள்ளிக்கூடம் கிராமத்தில் இருந்தாலும்
இதை கடந்து வேறு பள்ளிக்கூடம்
சென்றவர்களும்;
ஒதுக்கி வைத்து
கிண்டல் பண்ணியவர்கள் பலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி- கலை, இலக்கியம் வழி நடத்தப்பட்டது.
வாசிப்பு-தேடல் வளர்ந்தது.
பரிசளிப்பு விழாக்கள் கூட
பட்டினத்து பாடசாலைகள் போல நடந்தது.
கல்வி வளர்ச்சி காணுகையில்
'சமூகம்' என்று வாழ்த்துக்கள் கிடைத்தது.
ஒதுக்கி வைத்து தூரச் சென்றோர்
எமது பள்ளிக்கூடம் என்று
புகழ்ந்து கொள்ளுகின்றனர்.
பல்கலைக்கழகம் சென்று
படிக்கா எமக்கு- எங்கள்
பள்ளிக்கூடம் தான்
பல்கலைக்கழகம்.
பல்துறையை எமக்கு
பாடம் சொல்லித் தந்தது.

**மல்லிகை**
பெப்ரவரி 2009



# உடைந்த நாற்காலியும் நானும்

அந்த இலகு நாற்காலி
நீண்ட காலமாகப் பாவிக்கப்பட்டு
கால்கள் ஆட்டம் காண
எனக்கு உபகாரம் செய்யப்பட்டது.
எனது கல்வி வாசிப்பு எல்லாமே
எனக்கு அந்தக் நாற்காலியில் தான்!
நான் படிக்கும் போது
சில சமயம் ஆடிக் கொண்டிருக்கும்.
ஓசைகள் கூட எழுப்பும்.
அப்பா அந்தக் நாற்காலியை
சரி செய்து என்னைப் படிக்க வைப்பதில்
மிக அக்கறையோடு இருப்பார்.

அந்தக் நாற்காலியோடு ஒரு பலகையையும்
படிப்பதற்கு மேசையாக்கித் தந்திருந்தார்.
இப்போ எனது வீட்டில்
வசதியான தளபாடங்கள் காட்சி தருகின்றன.
ஆடும் என் மகனின் தொட்டிலின்
கீழே- சமப்படுத்த
என் உடைந்த நாற்காலியின்
துண்டங்கள் தொட்டிலோடு,
துணையாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் படிப்பதற்கு பாவித்த பலகையோ
என் மகனை
நீராட்டி குளிப்பாட்டி
துணை கொள்கிறது.
என் வாழ்வில் ஒளி தந்த
உடைந்த நாற்காலியும்,
பலகையும்
இன்றும் எனக்கு
ஒளியாக.... என் மகனோடு!

**மல்லிகை**
ஜூன் 2010



# பாம்பு சாகவில்லை!

அந்தப் பாம்பு செத்துவிட்டதாக
பலர் சொல்லுகிறார்கள்
பாவனை பண்ணுகிறார்கள்
வீணாய் அடிக்காதீர்கள்
செத்த பாம்புக்கு என்கிறார்கள்.

பாம்பு இறந்தது போல
பாசாங்கு பண்ணுகிறது.
கண்களைக் கட்டிவிட்டு
எங்கும் அலைகிறது.
பொது இடங்களெல்லாம்
புலனாகா அந்தரங்கில்
அரைந்து திரிகிறது.
போருக்குள் ஒளிந்திருந்து
இப்போ
போர்வையை விலக்கி
ஆங்காங்கே நச்சுநா நீட்டி
தலைதூக்கி தாண்டவமாடுகிறது.
நவீனமாகத் தோன்றும் பழசுகளும்
வழிவந்த வாரிசுகளும்
பால் வார்க்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பாம்பும்
புத்துயிர் பெறுகிறது.
புதுக்கோலம் பூண்கிறது.
செத்த பாம்பை அடிக்காதீரென
செப்பித் திரிந்தோரும்
இப்போ
தங்களைத் தீண்டும் போதில்
பாம்பு சாகவில்லையென
பகிரங்கம் ஆகிறார்கள்.

**ஜீவநதி**
ஐப்பசி 2010
3வது ஆண்டு வெள்ளிமலர்



# முரண்பாடும் முற்றுப்புள்ளியும்

உன் மௌனப் பார்வை
என்னை ஆராதிப்பதாகவும் இருக்கலாம்.
அன்றேல்
எதிர்ப்பதாகவும் இருக்கலாம்.
உனக்கும் எனக்குமான
முரண்பாடுகள் பல...
முரண்பாட்டிலும் நாம்
ஒருவரையொருவர் நமக்குள்
நேசிக்கின்றோம்.
எமது கருத்தியல் வாதமே
எங்களை தூரவைக்கிறது.
நாங்கள் கருத்தில் முரண்படலாம்.
ஆனால்
அன்பில் பிரியமாய் உள்ளோம்.
முரண்பாட்டிற்காய்– நாம்
முகத்தை திருப்புவது
எமது பலவீனம்தான்!
எம்மில் படர்ந்த முட்களை
நாமே அகற்றுவோம்.
எமது முரண்பாடுகள்
எமக்குள் இருக்கட்டும்.
எமக்கு காதல் தூதுவர்கள் யாருமில்லையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு ஏன் யாருக்கும் சொல்கிறாய்?
இங்கே கதைகாவிகள்
காத்து நிற்கிறார்கள்
எங்கள் முரண்பாடுகளில்
பலருக்கு பெரும் மகிழ்வு.
எம்மைப் பிரித்து வைப்பதில்
இவர்களுக்கு அலாதிப் பிரியம்.
என்னிடமிருந்து உன்னைப்
பிரிப்பதற்கான முயற்சியே இவைகள்.
முரண்பாடுகளுக்கு
முற்றுப்புள்ளி வைப்போம்.
நேரே வா- நாம் சந்திப்போம்!

**மல்லிகை**
ஒக்ரோபர் 2010



# மக்களோடு பேசு!

நீ ஏன் மௌனிக்கிறாய்
உனது மௌனம்
எனக்கு பலதை புரியவைக்கிறது.
நான் அவளோடு பேசுவது
நட்போடு!
அவளும் நானும்
நீண்ட நாள் நண்பிகள்
உன்னை அறிவதற்கு முதல்
அவளை நான் நன்கறிவேன்.
நீ அன்றும் மௌனி
இன்றும் மௌனி
ஆனால்- மற்றவர்கள்
என்னோடு பழகுவதை
நீ விரும்புவதில்லையே-
ஏன்?

நான் அவளுக்கு வழிகாட்டுவது
அவளை அறிமுகப்படுத்துவது.
ஏன் சந்திப்பது கூட......
உன்னைப் பாதிக்கிறது.
அவள் வெளியுலகை
பார்க்க விரும்புகிறாள்
உனக்கு வெளியுலகு
கணினிக்குள் தெரிகிறது.
அவளோ வெளியுலகு வந்து
புதிதாய் சொல்லத் துடிக்கிறாள்.
நீ என்றும் வாய் பேசா மடந்தையாக
மௌனம் காக்கிறாய்.
மனதால் கொதிக்கிறாய்.
நீயும் வெளியே வந்து.......

**நீங்களும் எழுதலாம்**
கார்த்திகை- மார்கழி 2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடங்காத் திமிர்

சமூக அமைப்பை
கட்டிக்காத்து
உயர்ந்த மனிதரென
உலகம் பார்க்க வாழ்ந்த
சாதியின்
பெரிய குடும்பத்து
செல்வக் குழந்தைகள்
நாங்கள்!
ஏவல் வேலையாட்களை
எட்ட நிற்க வைத்து
உணவு கொடுத்த
எங்கள் பரம்பரை!
ஆனால் நாங்கள்
இன்று வேற்று நாட்டில்
வீதியோர வீடுகளில்
உணவுகளை தட்டில் எடுத்து
விடுதியிலே
நண்பர்களுடன் கூடி
புசித்து வாழ்கின்றோம்!
வீடு வாசல் பெருக்குதற்கும்
விசமம் புரியும் நாங்கள்



வீதி பெருக்கி விளை
அழுக்கு அகற்றுகின்றோம்!
மலகூடம்.... என்றால்
மனம் குமட்டும்.
முகம் சுழிக்கும்!
இங்கு
பக்குவமாய் கைகள்விட்டு
சிந்தாமல் சிதறாமல் அள்ளி
வேற்று நாட்டில்
சீராகக் கழுவுகின்றோம்.
என்னவேலை என்றாலும்
ஏனென்று கேட்காமல்
வீட்டின் பின்புறத்தால் வந்து
உழைத்து உழைத்து
பணம் சேர்ப்போம்.
எங்கள் நாட்டில்
தொழிலுக்கு ஒரு சாதி,
சாதிக்கொரு தொழில்
இழிவு சொல்லி அழைத்திடுவோம்.
இங்கு
எந்தத் தொழில் செய்தாலும்
அந்தச் சாதியிலா நாம் பிறந்தோம்?
உயர் குலத்துப் பெருமையுடன்
உழைத்துப் பொருள் சேர்த்து
உயர்ந்த குடிகோத்திரத்து
"உத்தமராய்" நிமிர்ந்து நிற்போம்!

வீரகேசரி வாரமலர் -01.07.1990-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூட்டு

காலைத்திருட்டு காலம்
என் சுதந்திரம்
பறிபோகிறது!

சுதந்திரமாக
செயல்படுகையில்
என்னையறியாமலே
என் சுதந்திரம்
இறுக்கப்படுகிறது.

இவையெல்லாம்......
நானை அடக்க
நல்லபடி நட என்பதற்காகவோ?
ஆனாலும் எனக்குள்
நான் சுதந்திரமாகப் பேசுகின்றேன்,
யாருக்கும் தெரிவதில்லை.

மல்லிகை 44 ஆண்டு மலர்
ஜனவரி-2009



## மீண்டு வந்த நாட்கள்

தரவை நிலங்களிலும்
காட்டுவழிகளிலும்
கால் வலிக்க பயணித்த நாம்
மிதிவெடிகளுக்கும்
வெடிச்சத்தங்களுக்கும்
இடையில் சிக்கி
எம் உறவுகளை தொலைத்துவிட்டு
கண்ணீரோடு....
கைக்குழந்தைகளையும்
கையில் கிடைத்ததையும்
பொதிகளாக்கி சுமந்து வந்து
அங்குமிங்குமாய்
தலைகள் தப்பினோம்.
பசிக்கு இலைகுழைகள்.....
ஆற்றுநீர்ச்சுவை அதிகாரமாகிவிட்டது!
யுத்தப் பீதிக்குள்
பித்துப்பிடித்தலைந்தோம்.
நச்சுவாயுக்கள்
எம்-நாசிக்குள் சென்று
நம்மை மயக்கிவிட்டது
புன்னகை கொண்டவராய்
பகுதி பரா நடந்தோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுத்த உடுப்புகளும்
மரணபயமும் சேர்ந்து
எம்மை- காட்டுமிராண்டிகளாய்
காட்சிக்கு தெரிந்தது.

அகதிமுகாம் வாழ்வை
அனுதாபமாக பார்த்தோர்
ஏதிலிகளான எமக்கு
ஏலுமான உதவிகள் புரிந்தனர்.
மீண்டு வந்த நாங்கள்
சொந்த இடம் மீண்டபோது
எமது நிலம் ஆதி நிலையில் கிடந்தது.
சொந்தங்களைப் போல்!
இப்போ
எங்கள் இருப்புகளையும்
இழந்து......
இழப்பதிற்கெதுவுமில்லையென
மீண்டு வந்த நாட்களின்
வடுக்களோடு!

மல்லிகை 46ஆண்டு மலர்
ஜனவரி-2011



# கவித்துளிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேதம்

குழந்தைகள்தானே
குழந்தைகள் கூடிப்
பசியால் அழுதன.
மாடியின் முன்னே
அரிசி மூட்டைகள்
'லொறி'யால் இறங்கின.

வெற்றிகை 1974
ஏக்கிந்தியா 1975

## சில்லறைகள்

நாங்கள் சில்லறைகள்
அவளுக்கு;
எங்கள் தொழிற்சாலையில்
மகான் நினைத்து
உண்டியல் குலுக்குகிறார்.
விழுகின்ற சில்லறைகள்
நாங்கள் தான்!

மல்லிகை
மார்ச் 74



## பிரிவு

ஒரே ஊரில்
இரண்டு சமாதான நீதவான்கள்
இப்போ
ஒரே ஊர் இரண்டு.

மல்லிகை

## புகழ்

கட்டுச் சிகரம்
கட்டிட
எடுப்பாக
திருவிழாக்கள்!
ஆண்டவன் சந்நிதியோ
அழியும் நிலையில்

மல்லிகை
யூலை 75

## தடை

அவன்+ அவள்
= காதல்
சாதி+ சமயம்
தகுதி+தரங்கள்
தடுத்து
மறித்தன!

வீரகேசரி
15.08.1978

## பக்தி

வீட்டிற்கருகில்
பெரிய கோவில்
சொந்தம்.
வசு ஏறி
வெளியே..... ஒதுங்கித்
தொழுவதுதான்
சிலருக்கு
பக்தி மோட்சம்

மல்லிகை
1974



## உபதேசம்

சாதியால் குறைந்தவனை
காதலித்த மகளுக்கு
காதலை மறக்க
பைபிளில் சத்தியம்
கேட்கிறார் தந்தை
பைபிளின் உள்ளடக்கம்
"எல்லோரையும் ஒன்றாய் நேசி"

தினகரன்
10.01.1975

## கௌரவ அகதி

தெருவில் பிச்சைக்காரன்
"ஐயா"வென்று'
என்னிடம்
கையேந்தினான்.
நான் அவனிடம்
"போ ஐயா" எனக் கூறி
தற்காலிக இருப்பிடம்
வந்தேன்.
அவனறிவானா
நான்........

வீரகேசரி
09.09.1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருவம்

சின்னப் பருவத்தில்
சிறுமணலில் வீடு
கட்டிய- நான்
இன்று
வெட்டை வெளியிலே
கட்டிடம் எழுப்புகிறேன்.

**அக்னி: 2**
1975

## இனம்

வெட்டை வெளியில்
குந்தியிருந்து
குதூகலமாக உரையாடும்
எம்மை நோக்கி
நட்போடு வருகிறது
நம்மூர் மாடுகள்

1972

## இல்லாதது

நெஞ்சில்
பதித்தவள்
நெஞ்சால்
அகற்றினாள்
நல்ல பதவி
நல்ல சாதி
என்னிடம் இல்லை.



## பிரதிபலன்

பல காதல்
பல சோதனைகள்
ஒரு வாழ்வுக்கு
வழிகாட்டும்

## கதி

வெளிநாட்டு
வேலையில் ஆசை.....!
பட்ட கடன்களைப்
போக்க
இன்னும் கடன்
பட்டுக் கொடுத்தேன்.
காசு வாங்கியவன்
காலை வாரினான்.

**வீரகேசரி**
08.02.1981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவு

குடிக்கின்ற
மதுவால்
குறையேதும்
வந்தால்
துடிக்கின்ற
உடலின்
துடிப்புகள்
நிற்கும்.

## சொந்தங்கள்

படிப்புக்கு
பதவிக்கு
சொந்தங்கள்
சேரும்!
பணத்திற்கு
திருமணத்திற்கு
சொந்தங்கள்
ஓடும்!



## பணம்

படிப்பறிவு இல்லா போதும்
பலர்-
சிலருக்கு ஒதுங்கி
நிற்கிறார்கள்.
நாங்கள் எட்டும்
'சீ' உயர்தரம் பெற்றும்
எங்களைத் தேடமாட்டார்கள்.
அச்சிலருக்கு
அந்த ஒன்றுதான
நிரந்தரத் தகுதி

## வேதனை

மலரின்
கிளையில் முள்ளு
அது
கைவிரலில் குத்தி
குருதி
இன்னும் பாய்கிறது.

**வீரகேசரி**
27.12.1981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்ச்சி

தனிப்பட்ட
கோபங்கள்
குரோதங்கள்
உருப்பட்ட
ஊருக்குள் சாதித்து
இன்று பிரிவுகள்
வளருது!

**வீரகேசரி**
27.11.1984

## போலி வாழ்வு

பட்டு வேட்டிஇ சால்வை கட்டி
பதக்கம் சங்கிலி
கழுத்தில் மாட்டி
இடுப்பினுள்ளே 'ரோச் லைற்'
செருகி வைத்து
திருவிழா திறமாய்ச் செய்கிறார்
திருநாமம்!
அவரின் மனைவி
வெளுறல் சேலைகட்டி
நகைகள் ஏதுமற்று
வயல்வெளியில்
ஒதுங்கி நின்று
திருவிழா பார்க்கிறாள்.

**வீரகேசரி**
11.11.1981



# மெல்லிசைப் பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழியில் இவள் கவிதை

விழியில் இவள் கவிதை
மொழியில் வந்து பாயுது.
பனியில் அதன் குளிரில்
பசுமை பாடிக் களிக்குது - விழியில்

இசையில் வரும் சுவையில்
இளம் கானம் பாடுது
வசத்தால் மனம் தினமும்
ரசமாய் ராகம் பாடுது. - விழியில்

எழிலின் மிகையால் மதி
தினமும் காதல் கொள்ளுது.
களிப்பில் வரும் சுவையில்
கமலம் நிதம் பூக்குது -விழியில்



# கலையின் அரங்கில் தாரகையாள்

கலையின் அரங்கில் தாரகையாள்
கானத்தில் இவளே கலைக்குயிலாள்

அலையென அவளின் நர்த்தனங்கள்
ஆயிரம் பாவங்கள் காட்டுது பார்!
சிலையென நின்று சிரிக்கின்றாள்
சிந்தையில் நடம் பயில்கின்றாள்.

அரங்கினில் வந்த கலையரசி
ஆடலில் அவளே எழிலரசி
இசையினில் சுகராகம் சேர்த்திடவே
இனியவள் ஆடல் மயக்குதுபார்.

கலைமகள் தந்த கவின்நடனம்
காட்சியில் தில்லையின் நர்த்தனங்கள்.
நிலமதில் அவளே என் சொர்ப்பனங்கள்
நிம்மதி உலகின் முத்திரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு என்னும் கோவிலிலே

அன்பு எனும் கோவிலிலே
அகல் ஒளியே வீசுதங்கே
இன்ப மென்ற உறவினிலே
இனிய கீதம் பாடுதிங்கே!- அன்பு

அன்பு கொள்ளும் மனதினிலே
ஆசை சேர்ந்து பாய்கிறதே
கண்கள் என்னை நோக்கியே
காதல் கானம் பாடுது - அன்பு

கண்ணயர்ந்து தூங்குகையில்
கனவில் சேர்ந்து தூங்குகிறாள்.
சின்னவளே சித்திரமே என்
சிந்தைதனில் பதிந்தவளே. - அன்பு



## மேதினம்-ஒர்

எட்டுத்திக்கும் வீரமுழக்கம்
சங்கொலி கேட்கிறது.
கூட்டாய் தோழர் கூடி விரைந்தனர்
நாட்டிலெங்கும் மேதினமே!

ஆணவம் கொண்டவர் அடங்கிவிட்டார்.
அடிமைகள் என்றனர் விழித்துக் கொண்டார்.
காலத்தின் மாற்றம் தோழனின் கையில்
வியர்வையின் உதயம் மேதினமாகும்.
பாட்டாளி தோழர்களே!

தொழிலே தெய்வம் என்பவர் வாழ்வில்
துயரம் போக்கும் திருநாளாம்
இணைந்தவரெல்லாம் இதயம் மகிழ்ந்து
வியர்வையின் உதயம் மேதினமாகும்.
பாட்டாளி தோழர்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதினம்-02

பாட்டாளி தோழரின் தினமிது மேதினம்
பாரினில் பிறந்தது மேதினம்
நாட்டினில் தோழர்கள் வியர்வையிலே
நலமுடன் வந்தது மேதினமே!

உழைத்தவன் உதிரம் சிந்தியே பாரில்
உயிர்கள் வாழ்வு மலர்ந்திடவே
விதைத்தவன் வாழ்வில் ஒருதினமின்று
விடிந்தது இன்று மேதினம்.

அடிமையின் விலங்கு அறுந்தது இன்று
அணியொடு கொடியும் பறந்ததின்று.
விடிவையே நோக்கி நடந்திடவே எங்கும்
வீசிடும் காற்றே மேதினம்!

# வதிரி ரவி சில நேச நினைவுகள்

அன்பு ஜவஹர்ஷா

**நா**ற்பது வருடங்கள் காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் இலக்கிய நினைவுகள் சிலவற்றின் ஆரம்பத்தை மீட்டிப் பார்ப்பதில் தனியான சுகமே இருக்கின்றது.

எழுபதுகளின் ஆரம்பமானது இலங்கை இலக்கியப் பதிவுகளில் இடம் பெற வேண்டிய மிக முக்கியமான காலகட்டமாகும். முற்போக்கு இலக்கியம், உட்பட சகல தத்துவார்த்த இலக்கிய வடிவங்களும் அதன் தீவிரமாக, வேகமாக பரவிய காலகட்டமிது.

நவீன கவிதை முயற்சிகள் பல வடிவமைப்புக்க ளோடு முனைப்புடன் செயற்பட இக்காலம் வழி சமைத்தது. தாமரை, தீபம், செம்மலர் போன்ற சஞ்சிகைகளும் வானம்பாடி, ஏன், வேள்வி, நாணல் போன்ற தமிழக கவிதை இதழ்களும் இலங்கையின் இளம் படைப்பாளிகளிடம் நடமாட ஆரம்பித்தது.

மல்லிகை, குமரன், தேசாபிமானி, அக்னி, சிரித்திரன் போன்ற இலக்கிய இதழ்கள் இத்தகைய முயற்சிகளுக்கு களம் அமைத்துக் கொடுத்தன. வீரகேசரி, தினபதி, தினகரன், சிந்தாமணி, போன்ற பத்திரிகைகளும் இதற்கு ஊன்றுகோலாக இருந்தன. யாழ்ப்பாணம், கொழும்பு, திக்குவல்லை, கல்ஹின்ன, கல்முனை, நீர்கொழும்பு, அநுராதபுரம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு எனப் பல பிரதேசங்களில் இலக்கிய அமைப்புக்கள் மும்முரமாகச் செயற்பட தொடங்கின. நவீன வசதிகள் குறைந்த, அறிமுகமாகிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலகட்டத்தில் சிறு பிரசுரங்கள் உட்பட நிறைய கவிதை வெளியீடுகளும் இடம்பெற்றன.

அநுராதபுரம் கலைச்சங்கம், தேன்துளி இலக்கிய வட்டம் என்ற இருவேறு அமைப்புக்கள் 1972 ஆம் ஆண்டு தொடக்கம் ஐந்து வருடங்கள் காத்திரமாக இயங்கி இலங்கை நவீன கவிதை வரலாற்றில் சில ஆரம்பப் பதிவுகளைப் பதித்தது. 1974 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இலங்கையின் 44 புதுக் கவிதையாளர்களின் 'பொறிகள்' என்ற தொகுதி, 1975ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'காவிகளும் ஒட்டுண்ணிகளும்' 1976 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'சுமைகள்' ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். எனது முயற்சியால் 1975ஆம் ஆண்டு தமிழகக் கவிதை ஏடான 'ஏன்' இலங்கைக் கவிதை மலர் ஒன்றையும் வெளியிட்டது.

வானொலியில் வாலிப வட்டத்தில் கண்டு கொண்ட வதிரி. சி. ரவீந்திரன் என்ற இனிய நண்பனைப் பற்றி சில நினைவுகளை அசைபோடும் போது மேல் சொல்லப்பட்ட தகவல்கள் தவிர்க்க முடியாத விடயமாகின்றது. தமிழகச் சிற்றிதழ்கள், கவிதை இதழ்கள் பல என்னூடாகவே இலக்கிய நண்பர்களுக்கு இலவசமாக இக்காலகட்டத்தில் கிடைத்து வந்தது. கசடதபற போன்ற சஞ்சிகைகளையும் மாத்தளையைச் சேர்ந்த பத்மநாப ஐயர நிறுவனம் போன்று இயங்கி வேறு பல இதழ்களையும் தமிழகத்தில் இருந்து பெற்று விநியோகித்து வந்ததை இங்கு குறிப்பிடவே வேண்டும்.

மேல் சொல்லப்பட்ட சில முயற்சிகள் திக்குவல்லை கமால் போன்ற எழுத்தாள நண்பர்களால் சாத்தியமான சந்தர்ப்பத்தில் மல்லிகை, பலாலி ஆசிரியர் கலாசாலை, முற்போக்கு எழுத்தாளர் சங்கம், பிரதேச இலக்கிய அமைப்புக்கள் போன்ற தொடர்புகளால் நிறைய இலக்கிய நண்பர்கள் கிடைத்தார்கள்.

அன்று போல் இன்றும் சிரித்த முகத்துடன் இருக்கும் வதிரியின்



தொடர்பும் அவ்வாறானதாகும். இருபதை நெருங்காத இவர் பல சந்தர்ப்பங்களில் இம்முயற்சிகளில் இணைந்து கொண்டதை இவரது தொகுதியூடாக நினைத்துப் பார்க்க முடிகின்றது.

1973, 1974 ஆம் ஆண்டுகளில் பலாலி ஆசிரியர் கலாசாலை நவீன இலக்கியத்தில் சில பதிவுகள் வைத்து இருக்க வேண்டும். மலர் வெளியீடுகள், முற்போக்கு இலக்கியச் சொற்பொழிவுகள் எனப் பல விடயங்கள் இக்காலக் கட்டத்தில் நடைபெற்றன. திக்குவல்லை கமால், கலைவாதி கலீல், மூதூர் முகைதீன், ஜவாத் மரைக்கார் இப்படிப் பலரின் முயற்சிகளில் எனது பங்களிப்பும் இணைந்து கொண்டது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் வதிரி எங்களுடன் தொடர்பு கொண்டு இருந்தார்.

'அனு' என்ற யாழ் நண்பர்களோடு கவிதை சஞ்சிகை முயற்சியிலும், இவரது ஈடுபாடு இருந்தது. இவர் கவிதை எழுத ஆரம்பித்த காலகட்டமிது. இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் புதியவர்கள் சிறு கவிதைகளையே நிறைய எழுதினார்கள். இதை 'பொறிகள்' தொகுப்பு ஊடாகச் சான்று படுத்தலாம். வதிரியின் ஆரம்ப கால கவிதைகளும் அவ்வாறே இருந்தமை மிக நெருக்கமான தொடர்பாக இருந்த அந்த ஐந்து ஆண்டுகளில் வெளியான அவரது கவிதைகள் சமுதாய அவலங்களை பிட்டுக்காட்டுவதாகவே அமைந்து இருந்தன.

அநுராதபுரம் கலைச் சங்கம், தேன்துளி இலக்கிய வட்டம் ஆகியவற்றின் முயற்சிகளுக்கு பல சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து கலந்து கொள்வார். கவியரங்கு ஒன்றில் கூட கலந்து கொண்ட நினைவு இருக்கின்றது.

எழுபதுகளில் இடம்பெற்ற அல்லது பீறிட்டு எழுந்த கவிதை முயற்சிகளை சில விமர்சகர்கள், ஆய்வாளர்கள் கண்டு கொள்ளவில்லை. அல்லது மறைத்து விட்டார்கள். இம்முயற்சிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ, அகலங்கள் தொடர்பாக கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் இன்று பேசப்படுகின்ற பலரின் ஆரம்ப அல்லது மத்திம காலகட்டம் அதுவேயாகும்.


வதிரியின் தொகுதி வெளியாக நீண்ட நாட்கள் ஆனாலும், அண்மைக் கால ஆண்டுகளில் அவரது கவிதைகள் மீண்டும் வெளியாகத் தொடங்கி இருந்தாலும், எழுபது தலைமுறைகளில் ஆர்வத்துடன் இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டதை இக் குறிப்புக்கள் மூலம் சான்று படுத்த முடிகின்றது.

வதிரியின் இருப்பை அன்றும் இன்றும் பதித்து வருகின்ற தெணியான், ராஜ ஸ்ரீகாந்தன், போன்ற வாழுகின்ற வாழ்ந்த இலக்கியவாதிகளுடன் தொடர்பு கொண்டு அவ்வழியில் தொடர்கின்ற ரவீந்திரனின் நாடகத் தொடர்புகள் மறக்க முடியாதவை. அது போல உதைப்பந்தாட்டமும் தான். தேசிய நாடகக் குழு உறுப்பினர் என்ற பதவியோடு உதைப்பந்தாட்டம் தொடர்பான அவரது ஆக்கமும் பெறுமதியானது.

விவாகப் பதிவுகாரரான அவர் பதிவின் பின்னர் மணமக்களுக்காகப் பாடும் கவிதை விடயம் பலருக்கத் தெரிந்து இருக்கும், என்றும் நகைச்சுவை உணர்வு மிக்கவரான வதிரியின் இன்றைய இந்த ரசனை விடயம் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மேற் சொல்லப்பட்டவை அவர் தொடர்பாக இருப்பதோடு எழுபதுகளில் துலங்கத் தொடங்கிய சில முயற்சிகளின் பதிவாகவும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வதிரி.சி. ரவீந்திரன்

வதிரி.சி. ரவீந்திரன் –
70களின் ஈழத்துக் கவிதை
புதுக்கவிதை மயமான
காலகட்டத்தில்
தன் கவிதை முகத்தை காட்டியவர்.

70களின் ஈழத்துக் கவிதையின்
பாடுபொருள்
தீவிர சமூக விமர்சனமாக
இருந்த பொழுது –
அதன் அணியில்
தன்னையும் இணைத்துக் கொண்டவர்.

கவிதை என்பது
மக்களுக்கு புரிய வேண்டிய ஒன்று
என்ற கருத்தில்
தீவிரமாக இருப்பவர்.
அந்த கூற்றை
நிருபிக்கும் வகையில்
அவரது முதலாவது தொகுப்பான
''மீண்டு வந்த நாட்கள்' எனும்
இத்தொகுப்பில் அடங்கியிருக்கும்
கவிதைகள் அமைந்திருக்கின்றன.

என்றோ வரவேண்டிய
இவரது இத்தொகுப்பு
இன்று வெளிவந்து
ஈழத்து கவிதை உலகின்
மீண்டு வந்த நாட்களை
மீட்ட வைத்துள்ளது.
அதேவேளை –
மீண்டு வந்த நாட்கள்
மீண்டும் வராதிருக்க
சிந்திக்க தாண்டும்
ஒரு தொகுப்பாகவும் திகழ்கிறது.

இதுவே –
ரவீந்திரனின் இத்தொகுப்பின்
பெறுமானமாகும்.

– மேமன்கவி –

250/-

ISBN 978-955-30-3066-5

எஸ். கொடகே சகோதரர்கள்
675, பீ. டி எஸ். குலரத்ன மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: (011) 2685369, 2686925, 4-614904
godageem@slt.lk www.godage.com

அட்டைப் படம் – மேமன்கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org